JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 16 | Issue: 03 | May 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



தயங்கி நின்றதும் போதும்;
தாமதித்ததும் போதும், இனி

# ஓய்வில்லாமல் ஓடு...

# உள்ளே




வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com



# தலைவாசல்

*எனக்குப் பிரியமான வாலிபப் பிள்ளைகளே!*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

நாம் கடைசி கால எழுப்புதலின் நாட்களில் தேவனுக்காக வைராக்கியமாக ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பதை மறக்க வேண்டாம். தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது தீவிரம், முனைப்பு, வேகம். நாம் தேவனுக்காக எந்த ஊழியம் செய்தாலும், அதில் ஒரு தீவிரம் இருக்க வேண்டும். அதே நேரத்தில் அந்த ஊழியத்தை எவ்வளவு முனைப்போடு செய்கின்றோம் என்று நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இரண்டு மாதம் செய்ய வேண்டிய தேவப் பணியை நான்கு மாதங்களாகியும் செய்து முடிக்கவில்லை என்றால், முனைப்பு இல்லை என்று அர்த்தம்.

பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் எருசலேமுக்கு ஆலயத்தைக் கட்ட புறப்பட்டு வந்து, ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டார்கள். சில எதிர்ப்புகள் வந்தவுடனே, ஆலயத்தைக் கட்டும் தேவப்பணியை 15 ஆண்டுகள் கிடப்பில் போட்டது போல நிறுத்திவிட்டார்கள். சிலர் தேவ பணியை மறந்து சொந்தப் பணியைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். தேவ இராஜ்ஜிய பணிக்காக ஆலயத்தைக் கட்டாமல், சொந்த வீடுகளைக் கட்ட ஆரம்பித்து விட்டார்கள். தேவ திட்டத்தின் முனைப்பை மறந்த மக்களுக்குக் கர்த்தரின் வார்த்தை வந்த பின்பு பெலப்பட்டு வேகத்தோடு எதிர்ப்புகளைத் தாண்டி ஆலயத்தைக் கட்டி முடித்தார்கள்.

பல நேரம் தேவனுடைய பணியைச் செய்யவிடாமல், நம்மைச் சோர்வும் பெலவீனமும் தாக்கும்போது, தேவன் தாமே நம்மைப் பெலப்படுத்தி நிலைநிறுத்தி ஆண்டவருக்காக வேகத்தோடு, தேவ பணியை ஓய்வு இல்லாமல் ஓடி ஓடிச் செய்யக் கிருபையையும், வல்லமையையும் தருகிறார்.

## நாம் ஏன் வேகமாகச் செய்ய வேண்டும்?

காரணம், பரலோகம் துரிதப்படுகிறது. எனவே ஒவ்வொரு ஊழியத்திலும் வாலிபர்களாகிய நீங்கள், தீவிரத்தோடும் முனைப்போடும், வேகத்தோடும் செயல்பட உங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். தீவிரம், முனைப்பு, வேகம் இம்மூன்றும் கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்த ஒவ்வொரு தேவ ஊழியர்களிடையே காணப்பட்டது.

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய கால்களுக்கு ஓய்வு இல்லாமல், தீவிரமாய் சுவிசேஷ பணிக்காய் ஓடிக்கொண்டிருந்தார். தாவீது தீவிரமாய் யுத்தம் பண்ண ஓடினார். எஸ்தர் ராணியின் அஞ்சர்காரர்கள் தீவிரமாய் குதிரைகள் மேலும், கோவேறு கழுதைகள் மேலும் ஏறிச்சென்று நற்செய்தி அறிவித்தனர். இப்படி ஒவ்வொரு எழுப்புதல் வீரர்களும் செயல்பட்டார்கள்.



**Igniters ஆகிய நீங்கள் உங்கள்**

**தீவிரத்தை** - தேவ திட்டத்தில் காண்பிக்க வேண்டும்.
**முனைப்பை** - எழுப்புதல் தரிசனத்தை நிறைவேற்றுவதில் காண்பிக்க வேண்டும்.
**வேகம்** - உங்களின் அடையாளமாக மாற வேண்டும்.

**தயங்கி நின்றது போதும், தாமதித்ததும் போதும்...**
**இனி ஓய்வின்றி ஓடுகிற கால்களாக நம் கால்கள் மாறட்டும்!**

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி தொகுப்பு: காட்வின்


# தன்னம்பிக்கையே உயர்வு!




**ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் ஒரே மகளாகப் பிறந்து, இஞ்சினியரிங் படித்து, அரசு வேலைக்காகப் பல அவமானங்களைச் சந்தித்தும், அவநம்பிக்கையான வார்த்தைகளைக் கேட்டும், இயேசுவின் வார்த்தையை மட்டுமே நம்பி, தன்னுடைய கனவிற்காக பிரயாசப்பட்டு, இன்றைக்கு அரசு அதிகாரியாகப் பணிபுரிந்து வரும் சகோதரியுடன் ஓர் நேர்காணல்...**

**உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?**

எனது பெயர் மரிய எஸ்தர் பேபி. நான் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி என்ற ஊரில் பிறந்து வளர்ந்தேன். அங்கு தான் எனது பள்ளி கல்லூரி படிப்பை முடித்தேன். நான் ஒரு ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, மிகவும் பக்தியுடன் வளர்க்கப்பட்டேன். அதில் என்னென்ன பாரம்பரியங்கள் இருக்கிறதோ அதை எல்லாம் கடைபிடித்து வந்தேன். நான் என் பெற்றோருக்கு ஒரே மகள். சிறு வயதிலிருந்தே மிகவும் நன்றாகப் படிப்பேன். இஞ்சினியரிங் படிப்பை 2012ஆம் ஆண்டு படித்து முடித்து, அரசு வேலைக்கு முயற்சி செய்தேன்.



**சரி... அரசு வேலைக்கு முயற்சி செய்தீர்கள்... அது வாய்த்ததா?**

குடும்ப சூழ்நிலை மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகள் நிமித்தம் அரசு வேலைக்கான முயற்சியைத் தொடர முடியாமல் போனது. 2020 ஜனவரி 1ஆம் தேதி நான் இரட்சிக்கப்பட்டேன். அதன்பின்பு எனது ஆவிக்குரிய வாழ்க்கையில் மாற்றங்கள் வர ஆரம்பித்தது. இயேசுவை இன்னும் அதிகமாகத் தேடினேன். பலவித இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியில், மறுபடியும் நான் அரசு வேலைக்கு முயற்சி செய்யும்படி ஆண்டவர் என்னோடு பேசினார். எந்தவிதமான பின்புலமோ, ஆள்பலமோ இல்லாமல் ஆண்டவர் மேல் உள்ள நம்பிக்கையில் மீண்டும் முயற்சி செய்தேன். சுற்றி இருப்பவர்களின் அவநம்பிக்கையான பேச்சுகளுக்கு மத்தியில் 2022 முதல் TNPSC தேர்வுக்குப் படிக்க ஆரம்பித்தேன். ஆரம்பித்த ஒரு மாதத்திற்கு பின்பு எனது வலது கண்ணில் சிறிது சிறிதாகப் பார்வையிழப்பு ஏற்பட்டது. இதற்கான காரணம் கண்டுபிடிப்பதற்குள் 75% பார்வை இழப்பு ஏற்பட்டது (ஒரு வாரத்திற்குள்). அனைத்து மருத்துவ பரிசோதனைகள் எடுத்தபிறகும் என்ன பாதிப்பு எனக் கண்டுபிடிக்க முடியவில்லை. அனைத்து பரிசோதனையிலும் Normal என வந்தது. வைரஸ் பாதிப்பாக இருக்கலாம் என்று கூறினார்கள். இதற்கு மேலும் தாமதித்தால் முழுமையாக இழப்பு நேரிடக்கூடும் எனக் கூறி சிகிச்சை ஆரம்பித்தார்கள்.

ஆனால் இந்தச் சிகிச்சையில் 100% பார்வைத் திரும்ப வரும் என்று எந்த உத்திரவாதமும் இல்லை எனவும், பக்க விளைவுகள் இருக்கும் என்றும் கூறினர். சிகிச்சையும் நடந்தது. தொடர்ந்து 3 நாட்கள் drips ஏறியது, மேலும் 40 நாட்கள் 3 வேளையும் மாத்திரைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும், அறிவுரை வழங்கினார்கள். தேர்வு நெருங்கிக் கொண்டு வந்தது. மாத்திரைகள் உட்கொள்வதால் எழுந்து நிற்பதற்கு கூடப் பெலன் இல்லாமல், மிகவும் சோர்வாகக் காணப்பட்டேன்.

**அச்சச்சோ... அரசு வேலைக்கு முயற்சி செய்த உங்களைப் பலவீனம் தாக்கியது... எப்படி அந்தப் பலவீனத்தை மேற்கொண்டீர்கள்?**

''மருத்துவர்கள், இல்லாததை இருக்கிறது போல் தான் கூறுவார்கள்; ஆனால் மருத்துவருக்கெல்லாம் மருத்துவர் இயேசு இருக்கிறார். உங்கள் தலையின் மீது கை வைத்து ஜெபியுங்கள்'' என்று ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியில் மோகன் அண்ணன் அடிக்கடி சொல்வார்கள். அதேபோல், ஒவ்வொரு நாளும் பெலவீனத்தின் மத்தியிலும் ஆண்டவரிடம் 'உங்களுடைய பெலத்தை தாங்கப்பா' என்று தலைமேல் கை வைத்து ஜெபிக்க ஆரம்பித்தேன். ஜெபிக்க ஜெபிக்க ஆண்டவர் என்னோடு பேசினார். ''நானே உனக்கு நித்திய வெளிச்சமாய் இருப்பேன்'' எனவும், ''பெலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும்'' என்றும் என்னை ஒவ்வொரு நாளும் பெலப்படுத்தினார். அதே பெலத்தோடு மறுபடியும் எனது படிப்பை ஆரம்பித்தேன். Preliminary Exam எழுதும்போது வலது கண்ணைக் கை வத்து மறைத்து, இடது கண்ணின் உதவியோடு மட்டுமே அந்தத் தேர்வை எழுதினேன். வெற்றி பெறுவேனா மாட்டேனா என்ற நம்பிக்கை இல்லாதபோதும், ஆண்டவர் முதல் நிலை தேர்வில் எனக்கு வெற்றியைத் தந்தார்.

ஒரு பக்கம் பெலவீனம், மறுபக்கம் ஆண்டவரின் வார்த்தையை மட்டும் பிடித்துக் கொண்டு நடந்தேன். ஒவ்வொரு நாளும் ஸ்தோத்திர பலிகளை ஏறெடுத்து வந்தேன். முதன்மை தேர்வுக்குத் தயாரானபோது உடல்நிலை மிகவும் சோர்வடைந்தது. அந்நேரத்தில் Achievers-2023ல் கலந்து கொண்டபோது, ஒரு மாணவியின் பெலவீனத்தை மாற்றிச் சாட்சியாக நிறுத்தியதை அந்தக் கூட்டத்தில் அவள் பகிர்ந்துகொண்டாள். நானும் விசுவாசித்து கர்த்தரிடம், ''என் பெலவீனத்தையும் மாற்றி இதைபோல் சாட்சியாக மாற்றும்'' என வேண்டிக் கொண்டு வந்தேன். ஒவ்வொரு நாளும் ஆண்டவரிடம் சொல்லிச் சொல்லி ஜெபித்தேன்.

**சூப்பர்... ஜெபித்தீர்கள்... உங்கள் விசுவாச ஜெபத்திற்கு பதில் கிடைத்ததா?**

ஆம்...! ஒரு சில நாட்களுக்குப் பின் என் கண்களில் தெளிவான பார்வை உண்டானது. எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகமான வெளிச்சத்தை என் கண்களில் உணர்ந்தேன். அதே உத்வேகத்தோடு படிக்க ஆரம்பித்தேன். Main Exam எழுதினேன். அதற்கான ரிசல்ட் ஜனவரி 2024ல் வந்தது. என்னோட Overall Rank 3303, BC Community 1816. இந்த Rank ல் உள்ளவர்களுக்கு வேலை கிடைப்பது கஷ்டம் எனக் கூறினார்கள். நான் ஆண்டவரிடம்; ''ஆண்டவரே, பல இன்னல்களுக்கு மத்தியில் நீர் தான் என்னைப் படிக்க வைத்தீர், இந்தக் கடைசி தருணத்தையும் நீரே பார்த்துக் கொள்ளும்'' என்று அவரிடமே விட்டு விட்டேன். நான் வைத்திருக்கிற விசுவாசம் மட்டும் எனக்குக் குறையவேக் கூடாது என்று தனித்து ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, யவீருவின் விசுவாசத்தை ஆண்டவர் ஞாபகப்படுத்தி என்னோடு பேசினபோது, எனக்குப் புதுபெலனைக் கொடுத்தது. யார் அவநம்பிக்கையான வார்த்தைகள் பேசினாலும், எதைக் குறித்தும் கவலைப்படாமல் விசுவாசத்தோடு ஜெபித்தேன். 2024ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி counselingகிற்காக உள்ளே செல்லும்போது, 'கண்டிப்பாக உங்களுக்கு இது கிடைப்பதற்கான வாய்ப்பு குறைவு' என்று ஒரு நபர் கூறினார். இவ்வளவு தூரம் அழைத்து வந்த இயேசு, கடைசி மட்டும் என்னை அழைத்துச் செல்வார் என்று விசுவாசத்தோடு சென்றேன். ஆண்டவர் எனக்காக ஒரு seat கொடுத்து அந்த நொடியே அப்பாயின்மென்ட் ஆர்டர் வாங்கிக்கொண்டு வெளியே வர உதவி செய்தார். அந்த நேரம் எனக்கு என்ன செய்வதென்று



தெரியாமல், ஆனந்த கண்ணீருடன் ஆண்டவருக்கு அந்த இடத்திலேயே 'இயேசுவே உமக்கு நன்றி' என்று சொன்னேன். என்னால் வேறு எதுவும் பேச முடியவில்லை.

**சூப்பர்... சுகத்திற்காக ஜெபித்த உங்களுக்கு வேலையும் கிடைத்தது. இந்த வேலையை நீங்கள் எதிர்பார்த்தீர்களா?**

January 1, 2020 வாக்குத்தத்தம் இரட்டிப்பான நன்மையை தந்திடுவேன். எதில் ஆண்டவர் இரட்டிப்பான நன்மை தருவார் என்று எங்களுக்கு தெரியவில்லை.. ஆனால் தற்போது 2024ல் வேலையைக் கொடுத்தார். வேலைக்கான இடம் தேர்வு செய்யும்போதும், 'எனக்குப் பேசத் தெரியாது, நீங்களே எனக்காக இடத்தைத் தேர்வு செய்து கொடுங்கள்' என்று கேட்டேன். நான் நினைத்துப் போனது ஒரு இடம்; ஆனால் உள்ளே சென்று நான் சொன்னது வேறொரு இடம். ஆண்டவர் மகிமையாய் என்னை நடத்தி Medical & Rural Health Departmentல் ஒரு இடம் கொடுத்து, தற்போது திருச்சியில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன். யார் யார் என்னால் சாதிக்க முடியாது என எள்ளி நகையாடினார்களோ, அவர்கள் வாயால் ''எஸ்தர் நீ சாதித்து விட்டாய்'' எனக் கூறும்படி ஆண்டவர் என் சூழ்நிலையை மாற்றிவிட்டார்.



**உங்களுடைய திருமண வாழ்க்கை பற்றிச் சொல்லுங்களேன்?**

2013ஆம் ஆண்டு திரு. யூஜின் அவர்களோடு எனக்கு திருமணம் நடைபெற்றது. அப்போது அவர் இராணுவத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். 2019ல் விருப்ப ஓய்வு பெற்று, பின்பு அரசு வேலைக்காக பல முயற்சிகள் செய்தும் எல்லாமே வீணாகி விட்டது. மிகவும் மனம் சோர்ந்து போன நிலையில் ஒவ்வொரு நாளும் எல்லோரும் தூங்கிய பின் ஆண்டவர் பாதத்தில் அமர்ந்து அழுது ஜெபிப்பேன். அந்தரங்கத்தில் பார்க்கின்ற பிதா வெளியரங்கமாய் பதிலளிப்பார் என்ற வார்த்தையின்படி, அனைவரும் வியந்து பார்க்கும்படி Manager in Reliance Retail Ltd., MNC கம்பெனியில் எந்தவிதமான கடின நடைமுறைகளும் இல்லாமல் வேலைகிடைத்து, இன்றைக்கு அந்த இடத்தில் உயர்த்தி வைத்திருக்கிறார். எங்களுக்கு 4ஆம் வகுப்பு படிக்கும் ஒரு மகள் இருக்கிறாள்.

**உங்கள் வெற்றிக்கான காரணங்களைச் சொல்ல முடியுமா?**

* ஆண்டவரிடம் நான் கொண்ட விசுவாசம்.

* சிறு பிள்ளையைப் போல் ஆண்டவரிடம் எனக்குப் பாடம் சொல்லித் தாரும், என் பேப்பரை Correction பண்ணி கொடுங்கள் என்று ஆண்டவரிடம் நான் கொண்ட நட்பு.

* ஒவ்வொரு தேர்வின்போதும் 24x7 ஜெப உதவி மையத்திற்கு அலைபேசியில் அழைத்து, எனக்காகச் சகோதர சகோதரிகளிடம் செய்த ஜெபம்.

* Achievers meetingல் கொடுத்த Prayer Card வைத்து ஒவ்வொரு நாளும் ஜெபம் செய்வேன்.

* எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்தையும் ஆண்டவரிடமே ஒப்புக்கொடுத்தேன்.

* நான் படித்த நாள் முதல் Place Choosing வரைக்கும் என் இஷ்டப்படி எதுவும் இல்லாமல், 'ஆண்டவரே நீங்கத் தான் என்னைப் படிக்க வைத்தீர்கள், எனக்கு எது நல்லது என்று உங்களுக்குத் தெரியும், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்' என்று ஆண்டவரின் விருப்பப்படி அவர் பாதத்தில் வைத்து விட்டேன்.

**சூப்பர்... கர்த்தர் உங்களுடைய இருதயத்தின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ செய்தார். எதிர்பார்த்தது நடக்கவில்லையே என்று சோர்ந்து போய் இருக்கும் வாலிபர் உலகம் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

முதலாவது இயேசுவை விசுவாசிக்க வேண்டும். யார் என்ன சொன்னாலும் அதைக் காதில் வாங்காமல் வசனத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். தினமும் வேதம் வாசித்து ஜெபம் பண்ணுங்கள். ஆண்டவர் பேசுவதற்கு இடம் கொடுங்கள். ஆண்டவருக்கு முதலிடம் கொடுத்துப் பாருங்கள். ஆண்டவர் உங்களுக்கும் வழி இல்லாத இடத்தில் வழியை உண்டாக்குவார்.

**அன்பான வாலிபர்களே! சகோதரி மரிய எஸ்தர் பேபி சிறுபிள்ளையைப் போல், இயேசுவின் மீது அளவுக்கடந்த நம்பிக்கை, விசுவாசம் வைத்து ஜெபித்து காத்திருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், கடினமாகப் படித்தார்கள். அதனால் ஆண்டவர் அவர்களைச் சாதனையாளராக மாற்றி இன்றைக்கு அரசு அதிகாரியாக அமர்த்தி இருக்கிறார். நீங்களும் இயேசுவை முழுவதுமாக நம்புங்கள்! உங்களையும் தேசத்தில் யோசேப்பை போலத் தானியேலைப் போல உயர்த்தி வைப்பார்...!**

புதிர்: பெனிட்டா

BIBLE Treasure Hunt

# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை இணைக்கும்போது அதில் ஒரு வேத வசனம் மறைந்திருக்கும். சரியான விடையைக் கண்டுபிடித்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1




2




3




4




5




6




பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.05.2025

## கடந்த மாத வெற்றியாளர்

எஸ்தர் மேரி, தென்காசி

அவர்களை வாழ்த்துகிறோம்.


## கடந்த மாத விடைகள்

1. c) சேத் (ஆதி. 4:25)
2. a) ஓர்பாள் (ரூத் 1:14,15)
3. b) தீனாள் (ஆதி. 30:21)
4. d) மக்லோன் (ரூத் 4:10)
5. a) அப்சலோம் (2 சாமு. 14:25)
6. a) தாவீது (1 சாமு. 16:11,12)
7. c) யோசேப்பு (ஆதி. 39:6)

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

ஆலோசனை: அவி

# Heart Beat




*அண்ணா நான் பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதி இருக்கிறேன். மிகவும் நன்றாகப் படிக்கும் மாணவி அல்ல; சுமாராகத்தான் படிப்பேன். எனக்கு Computer Science group எடுத்துப் படிக்க வேண்டும் என்பதே எனது ஆசை. ஆனால் எனது ஆசிரியர் என்னுடைய வகுப்பில் நடந்த தேர்வுகளின் மதிப்பெண்ணை வைத்து, உன்னைப் போன்று Average மற்றும் Border Mark எடுக்கும் மாணவர்களுக்குக் கிடைக்காது. நன்றாகப் படிக்கிறவர்களுக்கு மட்டும்தான் கம்ப்யூட்டர் சயின்ஸ் Group கிடைக்கும் என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். வேண்டுமானால் Commerce, History Group எடுத்துப் படிக்கச் சொல்லுகிறார். ஆனால் எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. Computer Science முடித்துவிட்டு Software Developer ஆக வேண்டும் என்பதே என்னுடைய Aim. ஆனால் ஆசிரியர் சொல்வது போல வேறு Group எடுத்துப் படித்தால் எப்படி என் கனவு நிறைவேறும்? இந்தப் பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண் எடுப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்னைப் போன்று Average மார்க் எடுக்கும் மாணவர்களுக்கு ஆசை, கனவு இருக்கக் கூடாதா? ஏதாவது ஒரு Group எடுத்துத் தான் படிக்க வேண்டுமா?*

**- ஷைனி,**
**சென்னை.**

அன்பு சகோதரி ஷைனி, உங்களுடைய ஆசை எண்ணங்கள் நிறைவேறுமா என்ற கலக்கமும் பயமும் உங்களைப் பாதித்திருக்கிறது. அழகிய நோக்கம், உயர்ந்த தரிசனம் உடைய உங்களுக்கு என் பாராட்டுகள். இந்த நாட்களில் கல்லூரி படித்து முடிக்கும்போது கூட, எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறோம் என்றே பல பட்டதாரிகளுக்குத் தெரியாதபோது, பத்தாம் வகுப்பிலேயே எதிர்காலத்தில் என்ன ஆக வேண்டும் என்ற உங்களின் தொலைநோக்குப் பார்வை பாராட்டத்தக்கது.

ஷைனி, உங்களுடைய விருப்பம்போல நீங்கள் **Computer Science** படித்து முடித்து, நிச்சயம் ஒரு **Software Developer**ஆக உயருவீர்கள். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. எனவே மனம் தளர வேண்டாம்.

உங்களுடைய ஆசிரியர் உண்மை நிலையைச் சொல்லியிருக்கிறார். அந்த **Group** படிக்க வேண்டும் என்றால், போதுமான மார்க் இருக்க வேண்டும். அதிகமாகக் கவனம் செலுத்தி படித்தால் மாத்திரம்தான் தேர்ச்சி பெற முடியும். ஒருவேளை உங்களுக்குப் படிப்பு ஒரு பாரமாக இருந்து விடக் கூடாது, இலகுவான **Group** எடுத்தால் உங்களால் படிக்க முடியும், எளிதில் தேர்ச்சி பெறலாம் என்ற நல்ல எண்ணத்தில் சொல்லி இருக்கலாம். எனவே நீங்கள் உங்கள் ஆசிரியரைத் தவறாக எண்ண வேண்டாம்.

## ஷைனி நீங்கள் ஒரு software developer ஆக வேண்டும் என்றால் நீங்கள் கடைபிடிக்க வேண்டியவை...

**நான் இந்த 10ஆம் வகுப்பு தேர்வில் போதுமான மதிப்பெண் எடுப்பேன் என்ற நம்பிக்கையோடு இருங்கள்.**

**மேலும் 11ஆம் வகுப்பு ஆரம்பத்திலிருந்து உங்கள் பாடங்களில் முழு கவனம் செலுத்திப் படியுங்கள்.**

**தேவையில்லாத Distraction, Unwanted time waste காரியங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது.**

**Average Student ஆன நீங்களும் Outstanding Student ஆக மாற முடியும். ஆனால் அதற்கான Planning, Preparation, Presentation செய்வதற்கு தவறக் கூடாது.**

**அநேகர் ஆசைப்படுவார்கள், ஆனால் அதற்கான Hard Work செய்வதற்கு மனமும் வராது, முயற்சியும் இருக்காது.**

**11th standard தான் நீங்கள் உங்கள் இலக்கை அடையவதற்கான foundation. சரியாகப் படித்தால் 12ஆம் வகுப்பு போகும்போது பாடங்கள் அதிகப் பளுவாக இருக்காது.**

**மேலும் தேர்வு இருக்கிறதோ இல்லையோ ஒவ்வொரு நாளும் 5-6 மணி நேரம் படிப்பது உங்கள் Habit ஆக மாற வேண்டும்.**

**அதுமாத்திரம் அல்லாமல் Software Developer ஆக வேண்டுமானால், Computer Languages அநேகம் படிக்க வேண்டும். Java, C ++, C Programming, Python இப்படி பல Languages படிப்பதற்கு இப்பொழுதே mind fix பண்ணிக் கொள்ளுங்கள்.**

12ஆம் வகுப்பில் இப்படி படித்தால் தான் நீங்கள் விரும்பிய Computer science groupல் நல்ல மார்க் எடுக்க முடியும். தொடர்ந்து கம்ப்யூட்டர் courseல் மேல் படிப்பு படிக்கலாம். அப்படி கவனம் செலுத்தி படிக்கவில்லை என்றால், உங்கள் ஆசிரியர் சொன்னது போலத் தோல்வியைத்தான் நீங்கள் சந்திக்க வேண்டியதாக இருக்கும்.

ஷைனி, உங்களைப் போல நானும் ஒரு Average Student ஆகத் தான் இருந்தேன். என் வாழ்க்கையில் நான் இயேசுவை நம்பியபோது, அவர் என்னுடைய கொஞ்சம் ஞானத்தை ஆசீர்வதித்தார். பல நேரங்களில் தோல்வி மற்றும் Average Mark எடுத்த என்னையும் வெற்றி தந்து கனப்படுத்தி உயர்த்தினார்.




தாவீது என்னும் வாலிபனை எல்லோரும் ஒதுக்கி வைத்தார்கள். அவனால் ஆடு மேய்க்கத் தான் முடியும் என்று எண்ணினார்கள். அவன் தகப்பனாகிய ஈசாய் தாவீதின் சகோதரர்களை இராணுவத்தில் சேர்த்து இருந்தார். ஆனால் முழு இராணுவமுமே கோலியாத் என்ற ஒரு யுத்த வீரனைப் பார்த்துக்




கலங்கி நின்றபோது, யுத்தத்தைப்பற்றி ஒன்றும் அறியாத வாலிபனான தாவீது கோலியாத்தோடு யுத்தம் பண்ணி ஜெயித்தான். அற்பமாக எண்ணப்பட்ட அவனை தேவன் ஆசீர்வதித்து அவனுடைய சகோதரருக்கு முன்பாக உயர்த்தினார்.

**ஷைனி, நீங்களும் உங்கள் வாழ்க்கையில் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து, படிக்க முயலுங்கள். எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் கர்த்தருடைய கரத்தினாலே ஆகும் (I நாளா. 29:12). விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்தில் நாம் எவைகளை கேட்கிறோமோ அவைகளையெல்லாம் பெறுவோம் என்று ஆண்டவர் வாக்களித்திருக்கிறார் (மத்தேயு 21:22). விசுவாசத்தோடு கடினமாகப் படியுங்கள்! கர்த்தர் நிச்சயம் ஜெயத்தைக் கட்டளையிடுவார்...!**

செய்தி: மோகன் சி. லாசரஸ்

# தேவன் விரும்பும் எழுப்புதல் தாகம்







**பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன் (லூக்கா 12:49).**

இந்த வசனத்தை நாம் வாசிக்கும்போது ஆண்டவர் இதில் எழுப்புதலைக் குறித்து பேசுகிறார் என்பதை அறிந்துகொள்ள முடியும். பூமியில், அதாவது மனிதர்கள் மேல் எழுப்புதல் அக்கினி போடப்பட வேண்டும், அதுபற்றி எரிய வேண்டும் என்பதே ஆண்டவரின் உள்ளத்திற்குள் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த தாகம். அதுதான் அவருடைய ஜெபமாகக் கூட இருந்திருக்க வேண்டும்.

இயேசு தினந்தோறும் அதிகாலையில் எழுந்து ஜெபம் செய்தார் (மாற்கு 1:35). சாயங்காலத்தில் மலைமீது ஏறி ஜெபம் செய்தார் (மத்தேயு 14:23). மீண்டும் மலைமீது ஏறி இரவு முழுவதும் ஜெபித்தார் (லூக்கா 6:12). இப்படி இயேசு ஒருநாளைக்கு குறைந்தது 4 மணி நேரம் தனித்து ஜெபித்திருக்க வேண்டும் என்பதாகப் பரிசுத்தவான்கள் குறிப்பிடுகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இயேசு தம்முடைய சீஷர்களோடு சேர்ந்து ஜெபித்ததாகவும் வேதம் நமக்குச் சொல்கிறது. அப்படி அவர் ஜெபிக்க வேண்டிய அவசியம் என்ன? அக்கினி போடப்பட்டு உலகம் முழுவதும் பற்றி எரிய வேண்டும் என்பதே இயேசுவின் தாகமாகவும், வாஞ்சையாகவும் இருந்தது. பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது மேல் வீட்டறையில் கூடியிருந்த 120 பேர் மேல் அந்த அக்கினி அக்கினிமயமான நாவுகளாய் வந்து இறங்கியது. யாவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவின் விருப்பம் அங்கு நிறைவேறினதை நாம் பார்க்கிறோம்.

அந்த மேல் வீட்டறையில் உண்டான எழுப்புதல் அக்கினி நாம் வாழும் தேசத்தில் ஊற்றப்பட்ட வேண்டும் என்ற வாஞ்சையும் தாகமும் நமக்கும் இருக்கிறது. நாம் இப்போது கடைசிகால எழுப்புதலை எதிர்பார்த்து ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். இது ஆண்டவரின் வருகைக்கு முன்பாக வருகிற மாபெரும் எழுப்புதல். முதல் நூற்றாண்டில் உண்டான எழுப்புதலை அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அதன்பிறகு வேல்ஸ், ஸ்காட்லாந்து, இங்கிலாந்து, கொரியா, இந்தோனேசியா எனப் பல தேசங்களில் உண்டான எழுப்புதல் சரித்திரங்கள் நமக்குத் தெரியும். ஆனால் நாம் இப்பொழுது எதிர்பார்த்திருப்பது உலகம் தழுவிய கடைசிக்கால எழுப்புதலாக இருக்கப் போகிறது. அதற்காகத் தான் தேவன் நம்மை ஆயத்தப்படுத்தி வருகிறார்.

## எழுப்புதலைக் காண நாம் என்ன செய்ய வேண்டும்?

## எழுப்புதலைக் குறித்த தாகமும் வாஞ்சையும் நமக்குள் இருக்க வேண்டும்!

எழுப்புதல் தான் எல்லா பிரச்சனைக்கும் முடிவை உண்டாக்கும். சபைகள் வளர்ந்து பெருகும். சபைகள் மறுரூபமாக்கப்பட்டு திரள் கூட்டம் மக்களை ஆண்டவருக்குள் கொண்டு வரச் செய்யும். இந்த எழுப்புதல் வந்தே ஆக வேண்டும் என்ற தாகமும் வாஞ்சையும் நமக்குள் இருந்தால் தான் அதனை பார்க்க முடியும்.


ஸ்காட்லாந்து தேசம் ஒரு கிறிஸ்தவ தேசமாக இருந்தாலும், எங்குப் பார்த்தாலும் மதுபானக் கடைகள்; ஜனங்கள் குடித்து வெறித்து நடன கிளப்புகளில் தங்கள் நேரத்தைக் கழித்து இயேசுவை மறந்து போனார்கள். அதனால் தேசம் ஆண்டவரை விட்டு விலகிப் போனது. ஆலயங்கள் வெறிச்சோடி போனது. இதைப் பார்த்த ஜான் நாக்ஸ் ''எழுப்புதல் வேண்டும்'' என்று பல ஆண்டுகள் ஜெபித்தார். அவரின் ஜெபத்திற்கு பதிலாக ஒருநாள் ஸ்காட்லாந்து தேசத்துக்கு தேவன் எழுப்புதலை அனுப்பினார். எழுப்புதல் வந்தவுடன் மதுபானக் கடைகள், நடன கிளப்புகள் அனைத்தும் மூடப்பட்டன. ஆலயங்களில் மக்கள் கூட்டம் வர ஆரம்பித்தது. ஒரு பெரிய ஆவிக்குரிய மாற்றம் அத்தேசத்தில் உண்டானது. அந்த எழுப்புதல் ஸ்கட்லாந்து தேசத்தில் 100 வருடங்கள் பெரிய பாதிப்பை உண்டாக்கியது என்பதாகச் சரித்திரம் குறிப்பிடுகிறது.

வேல்ஸ் தேசம் மலைகளும், ஏரிகளும் உள்ள மிகவும் அழகான தேசம். எவ்வளவு அழகான தேசமோ அந்த அளவு பாவம் பெருகின தேசம். ஈவான் ராபர்ட்ஸ் என்ற வாலிபனின் உள்ளம், ''என் தேசம் மறுரூபம் அடைய வேண்டும்'' என்று கொழுந்து விட்டு எரிந்தது. எழுப்புதலுக்காகத் தாகத்தோடு 11 வருடம் ஜெபம் பண்ணினார். 11 வருட ஜெபத்திற்கு பின்பு 1904ல் எழுப்புதல் அக்கினி போடப்பட்டது. அதன் விளைவாக மதுபான கடைகள் மூடப்பட்டது. மக்கள் மதுபான பாட்டில்களை ரோட்டில் போட்டு உடைத்தார்கள், இப்படி அத்தேசத்தில் பெரிய மனந்திரும்புதல் உண்டானது. அவர் போகிற இடமெல்லாம் ஜனங்கள் கண்ணீரோடு மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டனர். ஆலயங்கள் நிரம்ப ஆரம்பித்தன. பெரிய ஆவிக்குரிய மாற்றம் உண்டாகி, சமுதாயத்தில் மாற்றம் உண்டானது. 2 வருடத்திற்குள் தேசமே மறுரூபமாக்கப்பட்டது.

அந்த எழுப்புதல் ஐரோப்பா கண்டம் முழுவதிலும் பரவி, 1906ஆம் வருடம் அமெரிக்காவில் உண்டான பெந்தெகொஸ்தே எழுப்புதலுக்கு வித்திட்டது. இந்த எழுப்புதலைப் பார்த்த வில்லியம் சீமோர் என்ற தேவ மனிதர், அமெரிக்காவில் அசூசா தெருவில் தேவனுடைய வார்த்தையை அறிவித்தபோது ஆவியானவர் ஊற்றப்பட்டு எழுப்புதல் உண்டானது. அங்குத் தோன்றியது தான் பெந்தெகொஸ்தே எழுப்புதல். அதன் மூலம் உருவாக்கப்பட்டவை தான் உலகம் முழுவதும் இருக்கும் பெந்தெகொஸ்தே சபைகள்.

எழுப்புதல் என்பது ஒரு தேசம், ஒரு பட்டணம் மறுரூபமாக்கப்படுவது. ஆவியானவரால் தான் அதைச் செய்ய முடியும். பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டு திரள் கூட்டம் மக்கள் இரட்சிக்கப்படுவது தான் எழுப்புதல். இந்த எழுப்புதலை நாம் பார்க்க வேண்டுமானால் நம்முடைய தேசத்தின் ஜனங்களைக் குறித்த ஆத்தும பாரம் நமக்கு உண்டாக வேண்டும், நம்முடைய முழங்கால்கள் முடங்க வேண்டும். விலைக்கிரயம் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் நம்மால் எழுப்புதலைப் பார்க்க முடியும்.

அன்பான வாலிபர்களே! எழுப்புதல் என்பது வெறும் சத்தமாகப் பாடுவது, சத்தமாகக் கைதட்டி குதித்து ஆர்ப்பரிப்பது அல்ல. உங்கள் இருதயத்தில் எழுப்புதலைக் குறித்த பாரம் இருக்கிறதா? சிந்தை இருக்கிறதா? அர்ப்பணிப்பு இருக்கிறதா? என்று யோசித்து பாருங்கள். இன்றைக்கு, "நான் எழுப்புதலுக்காக விலைக்கிரயம் கொடுத்து ஜெபிக்க என்னை அர்ப்பணிக்கிறேன்" என்று ஒப்பு கொடுப்பீர்களா? நீங்கள் அப்படி ஒப்புக்கொடுத்து ஜெபிக்கும்போது, கர்த்தர் உங்களையும் ஜான் நாக்சைப் போல, ஈவான் ராபட்ஸைப் போல, வில்லியம் சீமோரைப் போலப் பயன்படுத்தி உங்கள் நிமித்தம் தேசத்தில் மகா பெரிய எழுப்புதலை கட்டளையிடுவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை...!






முகப்பு செய்தி: சதீஷ்

**காலம் கடைசியாகக் காணப்படுவதினாலும், சத்துருவும் தனக்குக் கொஞ்ச காலம் தான் இருக்கிறது என்பதை அறிந்து தீவிரமாய் செயல்படுவதினாலும், நாம் அசதியாக இருக்காமல், ஒய்வு இல்லாமல் ஒடி இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை ஜனங்களுக்கு அறிவித்து, இயேசுவின் வருகைக்கு அவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும். சுவிசேஷம் மனிதனை மனிதனாக வாழ வழிவகுக்கிறது. நம்பிக்கையற்ற நிலமையில் இருக்கும் ஜனங்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது. இந்த நம்பிக்கையான வார்த்தைகளை யார் கொண்டு செல்வார்?? "யாரை நான் அனுப்புவேன் யார் நமது காரியமாய் போவான்" (ஏசாயா 6:8) என்று தேவனுடைய உள்ளம் இன்றும் ஏங்கிக் கொண்டுதான் இருக்கிறது.**

சமாரியாவை சீரிய இராணுவம் முற்றிகையிட்டதால் தேசம் முழுவதும் பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடியது. இஸ்ரவேலர் தங்கள் பிள்ளைகளைக் கொன்று தின்னும் நிலமைக்கு தள்ளப்பட்டனர். ஜனங்கள் வாழ்வில் நம்பிக்கை இழந்து செய்வதறியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். இஸ்ரவேலின் இராஜாவும் ஜனங்களின் நிலமையைக் கண்டு உதவி செய்ய முடியாத நிலமைக்கு தள்ளப்பட்டார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தத்







தேசத்திலிருந்த **''குஷ்டரோகிகளான நாலு பேர் ஒலிமுகவாசலில் இருந்தார்கள்; அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி நாம் இங்கே இருந்து சாக வேண்டியது என்ன''** (2 இராஜா. 7:3) என்று துணிச்சலாகச் சீரிய இராணுவத்தின் பாளையத்திற்கு புறப்பட்டுச் சென்றதால், கர்த்தர் சீரிய படைகளை இரத்தமின்றி, சத்தமின்றி சமாரியா தேசத்தை விட்டு ஓடச் செய்தார்.

பின்பு இந்த 4 குஷ்டரோகிகளும் பாளையத்தின் கூடாரத்திற்குள் வந்து புசித்து, குடித்து திருப்தி அடைந்த பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, நாம் செய்கிறது நியாயமல்ல இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள், நாம் மௌனமாய் இருந்து பொழுது விடியும் மட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும் (2 இராஜா. 7:9) என்று இரவோடு இரவாகத் தீவிரமாய் பட்டணத்திற்குள் ஓடி வந்து, இராஜாவுக்கும் ஜனங்களுக்கும் மீட்பின் செய்தியை அறிவித்துப் பெரும் அழிவிலிருந்து சமாரியா பட்டணத்தை மீட்டு எடுத்தனர். செல்வ செழிப்பும் திருப்தியான உணவு கிடைத்தும் அவர்கள் சுகபோகமாக வாழாமல், தங்களின் சரீர பெலவீனத்தை பொருட்படுத்தாமலும் எதிர்ப்புகளைத் தாண்டியும் அவர்கள் ஜனங்களுக்கு நல்ல செய்தியை அறிவித்தனர்.

இயேசு என்கிற நல்ல செய்தி இருந்தும், நம்மில் அநேகர், எனக்குப் பேசத் தெரியாது என்றும், ஞானம் இல்லை என்றும், நான் சொன்னால் யாரும் கேட்கமாட்டார்கள் என்றும் சாக்கு போக்குகளைச் சொல்லிக் கொண்டு இருக்கிறோமே தவிர, இவர்களைப் போல ஓய்வின்றி ஓடி இயேசுவின் அன்பை அறிவிப்போர் வெகு சிலரே.

மே மாதம் முழுவதும் விளையாட்டு மைதானங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் நேரத்தை வீணாக்காமல், கோடை விடுமுறையில் குளிர் பிரதேசங்களுக்குச் சென்று ஓய்வெடுக்காமலும், ஜனங்கள் இருக்கும் இடங்களுக்குத் தேடிச்சென்று கிறிஸ்துவின் அன்பை அறிவிக்கப் பிரயாசப்படுங்கள். கர்த்தருடைய நற்செய்தி அறிவிப்பதை உங்கள் கடமையாகச் செய்யாமல், அன்போடு செய்யுங்கள். அதற்கு ஏற்றப் பலனைப் பெறுவீர்கள்.



இயேசுவின் சீஷரான **தோமாவும்** தேவனால் அனுப்பப்பட்ட மிஷனெரிகளும் நம்மையும் நம் தேசத்தையும் நேசித்து அன்பு வைத்து ஓய்வு இல்லாமல் ஓடியதால், அவர்கள் திரளான ஜனங்களை கிறிஸ்துவுக்குள் நடத்தினார்கள்.



1820 முதல் 1835 வரை திருநெல்வேலி மாவட்டத்தில் **ரேனியஸ் ஐயர்** என்ற மிஷனெரி மூலமாகத் திரளான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இவர் ஓய்வின்றி ஓடியதால் 15 ஆண்டுகளில் ஏறக்குறைய 370க்கும் மேற்பட்ட திருச்சபைகளையும், 107 ஆரம்பப் பள்ளிகளையும் நிறுவி, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை வெகுதீவிரமாக அறிவித்தார். அதுமட்டுமின்றி லண்டனிலிருந்து கொண்டுவரப்பட்ட தாளில் துண்டுப் பிரசுரங்களை ஆயிரக்கணக்கில் அச்சிட்டு, விநியோகம் செய்தார். இதனால் கிறிஸ்தவ சமய அறிவும், சாதாரண மக்களின் எழுத்தறிவும் வளர்ந்தது. இவருடைய நற்செய்தி பணியால் 1825ஆம் ஆண்டு மட்டும் 3000க்கும் மேற்பட்டோர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். இவர் தமது சுவிசேஷப் பணியை இரவும் பகலும் ஓய்வின்றி செய்தபடியால் இவர் *திருநெல்வேலி மாவட்டத்தின் அப்போஸ்தலனாக* இன்றும் அழைக்கப்படுகிறார்.

எனக்கன்பான வாலிபர்களே! இனி காலம் செல்லாது; காலத்தை நிதானிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். ஒரு நாளைக்கு ஒருவருக்காவது இயேசுவை அறிவிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்து, அதைச் செய்து முடிக்கப் பிரயாசப்படுங்கள். தனியாகவோ அல்லது குழுவாகவோ இணைந்து தீவிரமாகத் தேவையுள்ள ஜனத்திடம் சென்று நம்பிக்கையுள்ள வார்த்தைகளைச் சொல்லி ஜனங்களை மீட்டு எடுத்துக் கிறிஸ்துவின் பக்கமாய் சேருங்கள்!!

# கிறிஸ்தவம்

தகவல்: எப்சிபா

Hi சகா, சகி! இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.கிறிஸ்தவம் அன்றும் இன்றும் என்ற தலைப்பில் இந்த மாதம் நாம் 'Digital Bible' கலாச்சாரம் பற்றி பார்க்கவிருக்கிறோம்.

அன்றைய கிறிஸ்தவம்: வேதம் கையில் கிடைக்காமல் கிறிஸ்தவர்கள் வேதத்திற்காக, வேத வார்த்தைக்காக ஏங்கி நின்றனர். இன்றைய கிறிஸ்தவம்: ஆளுக்கொரு Bible, விதவிதமான Bible, ஒவ்வொரு கைப்பேசியிலும் விதவிதமான Bible apps, வேதமும் வேத வார்த்தையும் பெருகிவிட்டது, ஆனால் அதற்குக் கிடைக்கக்கூடிய கனம் மலிந்துவிட்டது! நான் டிஜிட்டில் வேதாகமம் தவறு என்று கூற மாட்டேன். ஆனால், அதைக் காட்டிலும், நம் கையில் இருக்கும் அச்சு நகல் (Hard Copy Bible) வேதாகமம் படிப்பது சிறந்தது. இதனை டிஜிட்டல் மற்றும் அச்சு நகல் வேதாகமத்தின் நிறை குறைகளைக் (pros & cons) கொண்டு விளக்க விரும்புகிறேன்.




## அன்றும்

### அச்சு நகல் வேதாகமத்தின் நிறைகள் (pros)

- கவனம் சிதறாது.
- நாம் வேத வசனங்களின் அருகில் குறிப்பு எழுதிக் கொள்ளலாம். இதற்கு முன்பு நாம் எழுதிய குறிப்புகளும் நமக்கு உதவும், நம்மை ஊக்குவிக்கும்.
- வேதத்தை நம் கைகள் புரட்டும் போதும், கண்கள் பார்க்கும் போதும், வசனங்களின் இருப்பிடம் கூட நமக்குச் சுலபமாய் மனதில் நின்றுவிடும்.

### அச்சு நகல் வேதாகமத்தின் குறைகள் (cons)

- நாம் பொதுவெளியில் இருக்கும்போது ஏதேனும் ஒரு வசனத்தைப் பார்க்க வேண்டுமென்றால் digital bibleஐ திறந்து பார்ப்பது போல உடனடியாக வேதத்தைத் திறந்து பார்க்க முடியாது.




## இன்றும்

### டிஜிட்டல் பைபிளின் நிறைகள் (pros)

- எளிதாக அணுகக்கூடியது, எங்கு வேண்டுமானாலும் நாம் உடனடியாகத் திறந்துப் பார்க்கலாம்.
- பல்வேறு வேத மொழிப்பெயர்ப்புகளை நம் விரல் நுனியில் ஒரு நொடியில் கொண்டு வந்து விடலாம்.

### டிஜிட்டல் பைபிளின் குறைகள் (Cons)

- டிஜிட்டல் Bibleல் அச்சு நகல் வேதாகமத்தில் இருப்பது போல, தனிப்பயனாக்கம் இருக்காது. (Personalize பண்ண முடியாது).
- வேதம் வாசிக்கும் போது அலைப்பேசியில் குறுஞ்செய்தி வரும், வேதாகம செயலியில் நிறைய விளம்பரங்கள் வரும், அழைப்புகள் வரும், இவையெல்லாம் நம் கவனத்தை சிதறடிக்கும்.

பரிசுத்த வேதாகமம் அச்சிடப்பட்டு நம் கைகளில் கிடைப்பதற்காக உயிரிழந்த அநேக மிஷனெரிகள், காரணிகள் உண்டு. தோல் சுருள்களிலிருந்து தான் இந்த வேதாகமத்தை நமக்கு மொழி பெயர்த்து அச்சிட்டு நகல்களாக நம் கைகளில் தந்திருக்கிறார்கள். வேதத்தைச் சுதந்திரமாகப் பயன்படுத்த முடியாத எத்தனையோ நாடுகள் உண்டு. இன்னுமே வேதம் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்படாமல் இருக்கிறது. ஆனால் ஆண்டவர் நம் மொழியில், நாம் வாசிக்கும்படிக்கு, மொழி பெயர்த்து நம்முடைய Zகைகளில் தந்திருக்கிறார். **Cross reference-க்கு digital Bible** பயன்படுத்தினாலும், தனி வேத தியானத்திற்கு அச்சிடப்பட்ட வேதத்தைப் பயன்படுத்துங்கள். நீங்கள் ஆண்டவருடைய வேதத்தைக் கனம் பண்ணினால், ஆண்டவர் உங்களைக் கனம் பண்ணுவார்.




**உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர் (சங்கீதம் 138:2).**

உண்மை சம்பவம்: கமல் எபனேசர்

# கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷர்கள்!

**கிறிஸ்துவுக்காக நிலைத்திருந்த சீஷர்களில் இந்த மாதம் அப்போஸ்தலராகிய பேதுருவைக் குறித்து பார்க்க இருக்கிறோம். நிலைத்திருத்தல் என்பதற்கு எதிர் பதம் மறுதலித்தல். இந்த அப்போஸ்தலர் நம்மைப் போலவே மற்றவர்களுக்குப் பயந்து 3 முறை கிறிஸ்துவை மறுதலித்துவிட்டார்.**




கிறிஸ்துவின் மீது கொண்ட அன்பினால் அரண்மனை உள்ளே வரை சென்றவர்தான், ஆனாலும் அவருக்குள் போதுமான பெலன் இல்லை. முதலில் ஒரு வேலைக்கார பெண்ணிடம் எனக்கு அவரைத் தெரியாது என்று மறுதலித்தார் (மத். 26:69-70). இரண்டாவதாக மறுபடியும் ஒரு பெண் அவரைப் பார்த்து நீரும் இயேசுவோடு இருந்தவர் என்று சொன்னபோது நான் அவரை அறியேன் என்றார் (மத். 26:71-72). மூன்றாம் தரமும் அப்படியே மறுதலித்தார்.

ஆனால் சேவல் கூவியதும் கிறிஸ்து தன்னோடு சொன்ன வார்த்தையை நினைவு கூர்ந்து (மத். 26:71-75) மனம் கசந்து அழுதார். இந்த மனந்திரும்புதல் அவர் வாழ்வில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கும். நம்முடைய வாழ்வில் நாமும் கூடக் 'கிறிஸ்துவை எனக்குத் தெரியாது நான் கிறிஸ்தவன் அல்ல' என்பதைப் போல நடந்து கொண்ட எல்லா சூழ்நிலைகளுக்காகவும் முதலாவது மனம் கசந்து ஜெபிக்க வேண்டும்.

நாம் உலகத்தின் முடிவு பரியந்தம் கிறிஸ்துவுக்காக நிலைத்திருக்க, சாட்சியாக வாழப் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு நமக்கு மிகவும் அவசியமாய் இருக்கிறது (அப். 1:8). பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட பின்பு பேதுருவால் தைரியமாகக் கிறிஸ்துவுக்காக நிலைத்திருக்க முடிந்தது. நம்மைப் போலப் பலவீனமான இந்த அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியானவரின் பெலத்தால் தன் வாழ்வின் கடைசி வரை நிலைத்திருந்து சிலுவையில் தலைகீழாக அடிக்கப்படவும் தன்னை அர்ப்பணித்தார்.



*நம்முடைய வாழ்விலும் கிறிஸ்துவுக்காக நிலைத்திருக்க வேண்டும் என்ற விரும்பம் நமக்கு இருக்கலாம். அதற்குப் பரிசுத்த ஆவியானவரால் நாம் நிரப்பப்படுவது அவசியமானது. பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்காக, பெலன் அடைவதற்காகத் தாகத்தோடு ஜெபிப்போம். இந்தக் கடைசி நாட்களில் நமக்கு வரும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் கிறிஸ்துவை மறுதலித்திடாமல் பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினால் கிறிஸ்துவுக்காக நிலைத்திருப்போம். இந்த அப்போஸ்தலனைப் போல நம் வாழ்வின் மூலமாய் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவோம். ஆமென்..!*

தகவல்: மோசஸ்

# ஆசரிப்பு கூடாரம்

## உடன்படிக்கைப் பெட்டி

நாம் ஒவ்வொரு மாதமும் ஆசரிப்பு கூடாரத்தைப் பற்றி அறிந்துகொண்டு வருகிறோம். இந்த மாதமும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றிப் பார்க்கப் போகிறோம்.ஷ

தேவன் முதலாவது உடன்படிக்கைப் பெட்டியின் மாதிரியை மாத்திரமே மோசேக்குக் கொடுத்தார் (யாத். 25). மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும்படி சீத்தீம் மரத்தால் செய்யப்பட்டு பொன்னால் மூடப்பட்ட உடன்படிக்கைப் பெட்டி ஆசரிப்புக் கூடாரத்தில் முதலாவது ஸ்தாபிக்கப்பட வேண்டியதாக இருந்தது. இங்கே தேவன் மோசேயை சந்தித்து அவரோடு பேசினார் (யாத். 25:22).

### அப்படி அந்த உடன்படிக்கைப் பெட்டியில் என்ன இருந்தது (எபி. 9:4)?

#### மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம்: (யாத். 16).

வனாந்திரத்தில் தம் ஜனங்கள் புசிக்க அனுதினமும் வானத்திலிருந்து கொத்துமல்லி அளவாயும் வெண்மை நிறத்தில் தேனிட்ட பணிகார ருசி போலிருந்த ஒரு சிறிய வஸ்து, இதற்கு இஸ்ரவேல் வம்சத்தார் மன்னா என்று பேரிட்டார்கள்.



இந்த மன்னாவானது இஸ்ரவேலர் புசித்து, மறுநாளில் கெட்டுப்போன மன்னாவைப் போல் இல்லாமல், கெட்டுபோகாததாகவே இருந்தது. இந்த அழிவில்லாத விசேஷத் தன்மையுள்ள மன்னாவானது அழியாத ஜீவனாகிய தெய்வீக நிலையைக் குறிக்கிறது.

இஸ்ரவேலர்கள் கானானை சென்றடையும் வரை வானத்திலிருந்து அருளப்பட்ட இந்த மன்னாவைப் பெற்றார்கள். அதுபோல நாமும் பரலோகத்திலிருந்து வருகிற பரிசுத்தம், கிருபை, அபிஷேகம், பரம ஞானத்தை அனுதினமும் பெற்றுக்கொள்ள வேண்டும்.



## ஆரோனுடைய துளிர்த்த கோல் (எண். 16, 17)



இஸ்ரவேல் ஜனங்கள் சிலர், ''தேவன் உங்களை மட்டுமா தெரிந்து கொண்டார் நாங்களும் பரிசுத்தமானவர்கள் தான், நீங்கள் மிஞ்சிப் போகிறீர்கள்'' என மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். ஆகவே தேவன் இஸ்ரவேல் பிதாக்களின் ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுக்களிடத்தில் அவர்கள் பெயர் எழுதிய கோல் வாங்கச் சொல்லி அதனுடன் லேவியின் கோலில் ஆரோனின் பெயரை எழுதி வாங்கி சாட்சி பெட்டியின் முன்னே வை, நான் தெரிந்து கொள்கிறவனின் கோல் துளிர்க்கும் என்றார். மறுநாள் பார்த்தபோது, ஆரோனின் கோல் துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது'' (எண். 17:8). இந்தக் கோலானது மண்ணில் நாட்டப்படாமல், தண்ணீர் ஊற்றப்படாமலேயே கனி தந்ததுபோல நாமும் தேவ சமூகத்திலிருக்கும்போது ஆசீர்வாதமான கனி தரும் வாழ்வை வாழ முடியும் (1 பேதுரு 2:9).

## உடன்படிக்கையின் கற்பலகைகள்

தேவன் மோசேக்கு கொடுத்த இரண்டு கற்பலகைகளில் பத்து கட்டளைகள் எழுதப்பட்டிருந்தன. இஸ்ரவேல் மக்கள் விக்கிரகாராதனை செய்து கொண்டிருப்பதைக் கண்டதும், மோசே தேவனிடமிருந்து பெற்ற இரண்டு கற்பலகைகளையும் எறிந்து உடைத்துப் போட்டார் (யாத்.32:19). எனினும் தேவன் மோசேயிடம், நீ உடைத்துப் போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை நான் அந்தப் பலகைகளில் எழுதுவேன்; நீ அவைகளை பெட்டியிலே வைப்பாயாக என்றார் (உபா. 10:2). இதுபோலநாமும் வேத வார்த்தைகளை இருதய பலகையில் எழுத வேண்டும் (நீதி. 7:3). அதுமட்டுமல்லாமல், வேத வசனத்தின்படி வாழ்கின்ற அனுபவமும் வேண்டும் (2 யோவான் 1:6).



## உடன்படிக்கை பெட்டியும் இயேசு கிறிஸ்துவும்

உடன்படிக்கை பெட்டி பொன்னால் மூடப்பட்டது போல இயேசுவும் மகிமையால் நிறைந்திருந்தார். மன்னா வானத்திலிருந்து வந்தது போல இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி வந்த ஜீவ அப்பம் (யோவான் 6:51).

ஆரோனைப்போல் இயேசுவும் தேவனாலேயே தெரிந்துகொள்ளப்பட்டவர் (எபி. 5:4-6).

கற்பலகையில் இருந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து வந்ததுபோல இயேசுவும் தேவனிடத்திலிருந்து வந்த வார்த்தையானவர் (யோவான் 1:1,14).

## உடன்படிக்கைப் பெட்டியின் வல்லமைகள்

- கரைபுரண்டோடிய யோர்தான் (யோசுவா 3:15,16) உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்த ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் பட்டவுடனே குவியலாக நின்றது.
- தேவனுடைய பெட்டிக்கு முன்பாகத் தாகோனின் சிலை முகங்குப்புற விழுந்து உடைந்து போனது (1 சாமு. 5).
- யுத்தத்திற்கு உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு போய், ஜெயம் எடுத்தார்கள் (யோசுவா 6).
- உடன்படிக்கை பெட்டியைத் தொட்ட ஊசாவும் (1 சாமு. 6:19) பெட்டிக்குள் எட்டிப்பார்த்த பெத்ஷிமேசின் மனுஷரும் (1சாமு. 6:19) செத்தார்கள்.

உடன்படிக்கைப் பெட்டி, முதலில் ஆசரிப்பு கூடாரத்திலும், இரண்டாவது தேவாலயத்திலும் வைக்கப்பட்டிருந்தது. இறுதியாகப் பரலோகத்தில் தேவனுடைய ஆலயத்தில் அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது (வெளி. 11:19).



அடுத்த மாதம் ஆசரிப்பு கூடாரத்தின் வேறுசில சுவாரஸ்யமான தகவல்களைப் பார்க்கலாம்.

கிறிஸ்தவ செய்திகள்: ஜெனிபர்

# பரபரப்பு செய்திகள்

Hello friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க? பரபரப்பு செய்திகள் என்னும் இத்தொடரில் உங்களை மீண்டும் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்!

வீட்டை உயர்த்திட, நாட்டை வளர்த்திட, நாளை உருவாக, இன்று உழைத்திடும் உன்னத கரங்களே உங்கள் அனைவருக்கும் தொழிலாளர் தின நல்வாழ்த்துக்கள்!

இரவு பகல் பாராது இந்த வாலிப வயதில் கடினமாய் உழைத்தால் தான் எதிர்காலத்தில் சிறந்து விளங்க முடியும் என்ற குறிக்கோளோடு உழைக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.







நம்ம வேதத்துல புதிய ஏற்பாட்டின் காலத்தில் முதன்முதல் தோன்றின எழுப்புதலுக்குப் பின் நடந்த முதல் அதிசயம் சப்பாணி குணமாக்கப்பட்டதுதாங்க. பெந்தெகொஸ்தே நாளில் தேவன் தமது சீஷர்களை வல்லமையால் நிரப்பவே, அவர்கள் உலகத்தைக் கலக்கும் அப்போஸ்தலர்களாக மாறினர். மீனவர்களாய் இருந்த பேதுருவும், யோவானும் ஜெபிப்பதற்காகத் தேவாலயத்திற்கு சென்றபோது அவர்களிடத்தில் ஏதாவது கிடைக்கும் என்று எண்ணி தர்மம் கேட்ட சப்பாணியை பார்த்து வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை, நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நட என்று சொன்னார்கள். உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பலம் கொண்டு அவன் குதித்து எழுந்து நடந்து தேவனை துதித்து, தேவலாயத்திற்குள் சென்றதை நாம் பார்க்கிறோம்.

இதெல்லாம் அந்தக் காலத்துல மட்டும் தானா? அப்ப... இப்ப?அப்படின்னு யோசித்துக் கொண்டிருக்கும்போது தான் ஒரு பரபரப்பான செய்தி ஒன்னு இங்கிலாந்து தேசத்திலிருந்து கிடைத்தது. சரி வாங்க... அப்படி என்னதான் அங்கு நடந்துச்சுன்னு பார்ப்போம்.



20ம் நூற்றாண்டின் மிகப்பெரிய ஊழியராகக் கருதப்பட்டவர் ஸ்மித் விக்கில்ஸ் வொர்த். ஒருநாள் அவர் ஒரு மனிதருடைய வீட்டிற்கு உணவு அருந்த அழைக்கப்பட்டார். அந்த மனிதருக்கு இரு கால்களும் இல்லை. உணவு அருந்திவிட்டு இருவரும் சிறிது நேரம் பேசினர் இவரது நிலமையைக் குறித்து ஒரு பாரம் ஸ்மித்திற்கு உண்டானது. அவர் விசுவாசத்துடன் இந்த மனிதரைப் பார்த்து, நாளைக் காலை நீங்கள் உங்கள் கால்களுக்காகப் புதிய காலணிகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு கடந்து சென்றார். இந்த மனிதருக்கோ ஒரே ஆச்சரியம்; ‘கால்கள் இல்லாத எனக்குப் புது காலணிகளா?’ என்று தனக்குள் சிரித்துக் கொண்டார். ஆனால் அன்று இரவு அவர் படுக்கைக்குச் செல்லும்பொழுது அவருக்குத் தூக்கம் வரவில்லை, தேவன் அந்த மனிதரிடம் ‘நீ போய் என் தாசன் சொன்னபடியே செய்’ என்று பேசினார். எனவே இவர் அதிகாலையில் எழுந்து நகரத்திற்கு சென்று கடை திறக்கப்படுவதற்காகக் காத்திருந்தார். கொஞ்ச நேரத்திலேயே அந்தக் கடையின் வியாபாரி அங்கு வந்து இவரைப் பார்த்து, ‘சார் உங்களுக்கு என்ன மாதிரியான காலணிகள் வேண்டும்? நீங்கள் வாங்க விரும்பும் காலணியின் நிறத்தையும் அளவையும் கூறுங்கள் என்றார். இவரோ அதைக் கூறுவதற்கு சற்று தயங்கவே அப்போதுதான் அந்தக் கடைக்காரர் இவரது நிலமையைக் கண்டு சாரி சார் உங்களால் எங்களுக்கு உதவ முடியாது கால்கள் இல்லாத நீங்கள் எவ்வாறு காலணி அணிய முடியும்? என்றார். ஆனால் இவரும் பரவாயில்லை. எனக்குக் கருப்பு நிறத்தில், எட்டு அங்குலத்தில் ஒரு காலணியைத் தாருங்கள் என்று கூறவே, அந்தக் கடைக்காரரும் அந்தக் காலணியை எடுத்துக் கொடுத்தார். இந்த மனிதர் அந்தக் காலணியை வாங்கி தனது ஒரு காலில் போட்டதும் என்ன ஆச்சரியம்? அந்தக் கால் உடனே வளர ஆரம்பித்தது. அதுபோலவே தனது மற்ற காலிலும் காலணியைப் போடவே அந்தக் காலும் வளர ஆரம்பித்தது. இதைப் பார்த்த கடைக்காரருக்கோ ஒன்றும் புரியவில்லை. ஆனால் இந்த மனிதனோ புது காலணிகளோடு மாத்திரமல்ல, புது கால்களோடும் தனது வீட்டிற்கு கடந்து சென்றார். இந்த செய்தி ஸ்மித்திற்கு சேரவே அவர் இதைக் குறித்து ஆச்சரியப்படவில்லை, ஏனெனில் இது அவர் எதிர்பார்த்ததுதான்.

பாத்தீங்களா பிரண்ட்ஸ், எழுப்புதல் நாட்களில் தேவனால் பயன்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்களும், எழுப்புதல் வீரர்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பலத்த காரியங்களை தேவனுடைய வல்லமையால் செய்து இயேசுவை உயிருள்ளவராக நிரூபித்தனர். நம்மையும் ஆண்டவர் இந்த எழுப்புதல் காலத்தில் பயன்படுத்த சித்தம் கொண்டிருக்கிறார். நம் மூலமாய் தேவன் இவற்றையும் விட இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயங்களை நிகழ்த்த ஆவலாய் இருக்கிறார். ஆனால் அதற்கு அடிப்படை விசுவாசமும், ஒப்புகொடுத்தலும் மட்டுமே. என்ன friends நீங்க ரெடியா? (செய்திகள் தொடரும்)

ஜெபம்: எஸ்தர்

# ஜெபக் கையேடு மே 2025

## மின்சார பற்றாக்குறை

இந்தியாவின் மின்சாரத் தேவை 2027 வரை ஆண்டுக்கு 6.3% உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும் 2024-ல் 5.8% மின்சாரத் தேவை உயர்ந்துள்ளது. 2025-ல் இந்தியாவின் உச்ச மின்சார தேவை 270 ஜிகாவாட்டை தாண்டும் என மத்திய மின்சார ஆணையம் கணித்துள்ளது. இந்தியாவின் மொத்த மின் உற்பத்தி திறன் 83.8% அதிகரித்துள்ளது, மார்ச் 31, 2014 நிலவரப்படி 249 ஜிகாவாட்டிலிருந்து நவம்பர் 30, 2024ல் 457 ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளது. கோடை காலத்தில் கடந்த ஆண்டு 20,830 மெகா வாட் மின் தேவை இருந்தது. இந்த ஆண்டு 22 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தேவை இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

### ஜெபக்குறிப்புகள்:



*1) கோடைகாலத்தில் மின்சாரம் தடை இல்லாமல் கிடைக்கவும் மின் உற்பத்தி அதிகரிக்கவும் ஜெபிப்போம்.*

*2) கோடைகாலத்தில் மின் தேவை அதிகரிப்பால், மின்தடை ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.*

*3) தமிழகத்திற்கே தினசரி 15 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தேவை. அது கோடைக்காலத்தில் 17 ஆயிரம் மெகாவாட்டாக அதிகரிப்பதால் அந்தத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட ஜெபிப்போம்.*

*4) காற்றாலை மூலம் கிடைக்கும் மின்சாரம் சரியான முறையில் உற்பத்தி செய்யப்பட ஜெபிப்போம்.*



## வெயில்

2025ஆம் ஆண்டு இந்தியாவில் வெயில் அதிகமாகக் காணப்படும் என உலக வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த 2023-2024ஆம் ஆண்டு கோடை காலத்தில் வெப்பம் அதிகமாகக் காணப்பட்டது. குறிப்பாகக் கடந்த 124 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு வெப்பம் கடந்த 2024ஆம் ஆண்டு பதிவாகி இருந்தது. கடந்தாண்டு வெப்பநிலை இயல்பைவிட 0.54 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்தது. இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே 2024ஆம் ஆண்டு 219 மோசமான பருவநிலை நிகழ்வுகள் நடைபெற்றன. 26 நிகழ்வுகளால் 3700 பேர் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கானோர் புலம் பெயர்ந்துள்ளனர். இந்த வருடம் வரலாறு காணாத அளவுக்கு வெப்பநிலை இருப்பதால் கோடைகால நோய்கள் மக்களைத் தாக்காதபடி பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். கோடை காலத்தைச் சமாளிக்க அரசு அநேக காரியங்களைத் திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

### ஜெபக்குறிப்புகள்:

*1) கோடை வெயிலினால் ஜனங்களை எந்த நோய்களும் தாக்காதபடி அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.*

*2) வெயிலின் தாக்கத்தினால் மரணங்கள் சம்பவிக்காதபடி, தேவன் கால சூழ்நிலைகளை மாற்றும்படி ஜெபிப்போம்.*

*3) சிறுபிள்ளைகள் மற்றும் முதியோர் மீது தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்.*

*4) வெயில் பகுதியில் நின்று வேலை செய்வோர், பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.*



# தண்ணீர் பஞ்சம்

இந்தியாவில் ஏரிகள், குளங்கள், ஆறுகள், கடல்கள், ஓடைகள் எனப் பலவகையான நீர்நிலைகள் உள்ளன. ஆனால் 50%க்கும் அதிகமான மக்களுக்குச் சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை. சுத்தமான குடிநீர் கிடைக்காமல் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2,00,000 பேர் இறக்கின்றனர். தற்போதைய நிலவரப்படி நாம் தொடர்ந்து தண்ணீரைப் பயன்படுத்தினால், 2030-க்குள் இந்தியாவுக்குத் தேவையான தண்ணீரில் பாதி மட்டுமே கிடைக்கும். 2025 ஆம் ஆண்டில், 1.8 பில்லியன் மக்கள் முழுமையான நீர் பற்றாக்குறையை எதிர்கொள்வார்கள். தண்ணீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், சரியான திட்டமிடல் இல்லாத காரணத்தால் 2025ம் ஆண்டு இந்தியாவில் கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்படும் என்று எச்சரிக்கின்றனர். உலகில் 19 நாடுகள் 50க்கும் மேலானோர் தண்ணீர் தேவைக்கு அண்டை நாடுகளையே நம்பியுள்ளன. உலகில் மூன்றில் ஒருவருக்கு போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. ஐந்தில் ஒருவருக்கு சுகாதாரமான நல்ல குடிதண்ணீர் கிடைப்பதில்லை.

## ஜெபக்குறிப்புகள்:

*1) கோடைகாலத்தில் தண்ணீர் பற்றாக்குறையின்றி கிடைக்கவும், நீர்நிலைகளில் தண்ணீர் குறைவின்றி காணப்படவும் ஜெபிப்போம்.*

*2) சுத்தமான குடிநீர் இல்லாமல், மரணங்கள் ஏற்படுவது தடுக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.*

*3) தண்ணீருக்காக அண்டை நாடுகளை நம்பியிருக்கும் தேசங்களுக்கு அந்தந்த நாடுகளில் தண்ணீர் கிடைக்க அரசாங்கம் நல்ல திட்டங்களைச் செயல்படுத்த ஜெபிப்போம்.*

*4) தேசங்களில் ஆசீர்வாதமான மழை பெய்யவும், தண்ணீர் தட்டுப்பாடின்றிக் கிடைக்கவும் ஜெபிப்போம்.*





# பொதுத் தேர்வு முடிவுகள்

கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 12, 11 மற்றும் 10ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வுகள் நடைபெற்றன. 12ஆம் வகுப்பில் 8 லட்சத்து 21 ஆயிரத்து 57 மாணவ மாணவிகளும், 11ஆம் வகுப்பில் 8 லட்சத்து 23 ஆயிரத்து 261 மாணவ மாணவிகளும் தேர்வு எழுதி உள்ளனர். 10ஆம் வகுப்பு தேர்வினை 9 லட்சத்து 13 ஆயிரத்து 36 பேர் எழுதி உள்ளனர். 12ஆம் வகுப்புத் தேர்வு முடிவுகள் மே மாதம் 9ஆம் தேதியும், 10ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்புத் தேர்வு முடிவுகள் மே 19ஆம் தேதியும் வெளிவர இருப்பதாகக் கல்வித்துறை அறிவித்துள்ளது.

## ஜெபக்குறிப்புகள்:

*1) பொதுத் தேர்வுகள் எழுதித் தேர்வு முடிவுக்காகக் காத்திருக்கும் ஒவ்வொரு மாணவ மாணவியர்களுக்காக ஜெபிப்போம்.*

*2) தேர்வு முடிவுக்காகக் காத்திருக்கும் ஒவ்வொருவரும் நல்ல மதிப்பெண்கள் எடுத்து வெற்றிபெற ஜெபிப்போம்.*


*3) மாணவ மாணவியர் எதிர்பார்த்திருக்கும் மதிப்பெண்கள் பெறவும் அவர்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவும் ஜெபிப்போம்.*

*4) தோல்வியினிமித்தம் எந்த மாணவர்களும் தவறான முடிவுகள் எடுக்காமல் இருக்க அவர்களுக்கு மனதைரியம் உண்டாக ஜெபிப்போம்.*









# எழுப்புதலின் விதைகள்!

மிஷனெரி பயணம்: வில்லியம்

அடோனிராம் ஜட்சன் ஆகஸ்ட் 9, 1788 அன்று மாஸ், மால்டனில் பிறந்தார். மூன்று வயது சிறுவனாய் இருந்தபோதே வேதாகமத்தில் ஒரு அதிகாரம் முழுவதையும் வாசித்து, மனப்பாடமாகச் சொன்னதைக்கண்ட அவருடைய அப்பா, அவரை மிகச்சிறந்த கல்வி கிடைக்கக்கூடிய பள்ளிக்கு அனுப்பி வைத்தார். ஜட்சன் தனது 12வது வயதில் கற்றுக்கொள்வதற்கு மிகவும் கடினமான கிரேக்க மொழியைக் கற்றுக் கொண்டார்.

எந்தச் சுகவீனமுமின்றி ஆரோக்கியமாக இருந்த ஜட்சன், அவரது 14வது வயதில் இறந்து போவார் என்று நினைக்குமளவுக்குக் கடினமான ஒரு வியாதியால் பாதிக்கப்பட்டார். ஆனால் கர்த்தரின் கிருபையால் அதிலிருந்து அவர் அற்புத சுகம் பெற்றார். ஜட்சனுக்கு மிகவும் நெருங்கிய நண்பன் ஒரு நாத்திகவாதி. கடவுள்பேரில் நம்பிக்கையே இல்லாதவன். ஜட்சனையும் கடவுள் நம்பிக்கை இல்லாதவராக மாற்றப் பல ஆலோசனைகளைக் கூறி, அவருடைய மனதை மாற்றி அவரைத் திசை திருப்பினார்.



ஒருநாள் ஜட்சன் அவருடைய வாழ்க்கை, சிந்தனைகள் மற்றும் தீர்மானம் அனைத்தும் தவறு என்று உணர்ந்து இறையியல் படிக்கக் கல்லூரியில் சேர நினைத்தார். உடனே அதைச் செய்ய முடியாததால் மூன்று மாதங்கள் வீட்டில் தங்கி பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு முழுவதையும் கருத்துடன் படித்து வேதத்தைப் புரிந்துகொண்டார். கிறிஸ்துவுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். தான் ஆண்டவருக்கென்று செய்யவேண்டிய காரியம் ஒன்று உண்டு என்பதை உணர்ந்தார். இந்த நேரத்தில் தான் ''கிழக்கிந்தியக் கம்பெனி'' என்னும் புத்தகத்தில் இந்தியாவில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்படும் விதமும், அந்த நற்செய்தி மக்களிடையே ஏற்படுத்தும் நல்ல மாற்றத்தையும் விளக்கியது. இதைப் படித்த ஜட்சனுக்கு தானும் இந்தியாவுக்குச் சென்று மிஷனெரியாகப் பணியாற்ற வேண்டும் என்னும் ஆசை உண்டாயிற்று. மிஷனெரி பணியாற்றும் ஆர்வத்துடன் இந்தியாவில் உள்ள கல்கத்தா வந்தார். வந்த கொஞ்ச நாட்களில் மிஷனெரி பணிக்கு ஆட்கள் தேவையில்லை என்று கூறவே, இரவோடு இரவாகக் கப்பல் ஏறி, மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் மியான்மர் (பர்மா) சென்று இறைப்பணியாற்றினார்.

பர்மீய மொழியில் வேதாகமத்தை மொழியாக்கம் செய்ய வேண்டுமென்ற மிகுந்த ஆர்வத்தால் அந்த மொழியைக் கற்றறிந்தார். அநேக எதிர்ப்புகளுக்கு மத்தியில் மொழியாக்கமும் செய்து முடித்தார். இந்த வேளையில் தான், ஒருநாள் ஒரு கூட்ட இராணுவ வீரர்கள் ஜட்சனின் வீட்டுக்குள் வந்து ''உன்னை இராஜா அழைக்கிறார், உடனே புறப்பட்டு வா'' என்று இழுத்துக்கொண்டு போய் மரண தண்டனைக் கைதியாகச் சிறையில் அடைத்தனர். பல மாதங்கள் நல்ல உணவு



இல்லாமல் கஷ்டப்பட்டார். அவர் அணிந்திருந்த ஆடைகள் கிழிக்கப்பட்டன. அவருடைய கைகள் சங்கிலிகளால் கட்டப்பட்டன. ஜட்சன் இராஜாவின் கைதி என்பதால் அவரது வீட்டில் உள்ள பொருட்கள், சொத்து யாவற்றையும் கைப்பற்றி வரும்படி அதிகாரிகள் அனுப்பப்பட்டனர். இதை முன்னதாக அறிந்த அவரது மனைவி ஆன் ஜட்சன் **(Ann Judson)** தன்னுடைய சில பொருள்களையும், ஜட்சன் மொழிபெயர்ப்பு செய்து வைத்திருந்தவற்றையும் பத்திரப்படுத்தி, கட்டி, குழி தோண்டி, ஒரு இடத்தில் புதைத்து வைத்திருந்தார். சில நாட்கள் சென்றபின் அதைத் தோண்டி எடுத்து, அந்தப் பேப்பர்களை ஒரு தலையணைக்குள் வைத்துச் சிறையிலிருக்கும் ஜட்சனுக்குக் கொண்டுபோய் கொடுத்தார். அதை அவர் வாசித்துத் திருத்தம் செய்ய வேண்டிய இடத்தில் திருத்தங்கள் செய்து மிகுந்த திருப்தியும் ஆறுதலும் அடைந்தார்.

ஒரு கால கட்டத்தில் அவரை அந்தச் சிறையிலிருந்து வேறு சிறைக்கு மாற்றினார்கள். அவர் தன்னோடு அந்தத் தலையணையையும் எடுத்துக் கொண்டார். சிறை அதிகாரி தலையணையைக் கொண்டு செல்லக் கூடாது எனக் கோபத்தில் அவரது கரங்களிலிருந்து பறித்துத் தூர எறிந்துவிட்டார். ஜட்சன் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கதறி அழுதார். எத்தனையோ ஆண்டுகளாய் பர்மிய மொழியில் மக்களுக்கு வேதாகமத்தைக் கொடுக்க எடுத்த பிரயாசங்கள் யாவும் நஷ்டமாகிவிட்டதே என்று எண்ணி மிகவும் கலங்கிப் போனார்கள். எனினும் இருதயத்தின் ஆழத்திலிருந்து "ஆண்டவரே, இந்த மக்கள் தங்கள் தாய்மொழியில் உம்முடைய வார்த்தைகளை அறிந்து உம்மை விசுவாசித்து பற்றிக்கொள்ள எடுத்த இந்தப் பிரயாசத்தை சாத்தான் தோல்வியடையச் செய்யக் கூடாது. இதை நீரே பொறுப்பெடும்" என்று ஜெபித்துக்கொண்டே இருந்தார்.

சர்வவல்ல தேவன் அதைக் குறித்து வேறொரு திட்டத்தை வைத்திருந்தார். தூக்கி எறியப்பட்ட அந்தத் தலையணை ஒரு கிறிஸ்தவர் கண்டெடுத்து உள்ளே இருந்த பொக்கிஷத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தார். அந்த முழுமையான வேதாகமத்தை அச்சிட அவர் வேதாகம ஐக்கிய சங்கத்தை அணுகி, அவர்கள் அதை அச்சிட்டு அழகிய பர்மிய மொழியில் வேதாகமம் வெளிவந்தது. இதை அறிந்த ஜட்சனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தான் சிறையிலிருந்தாலும் அந்த வேலையைத் தேவன் மிகச் சிறப்பாகச் செய்துமுடித்தது பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைந்தார். ஆண்டவர் ஜட்சனின் இருதயக் கதறுதலின் ஜெபத்தைக் கேட்டார்.

இந்தப் பர்மாவில் சிலுவை நிரந்தரமாக நாட்டப்படும் வரைக்கும் நான் இந்த இடத்தை விட்டுச்செல்வதில்லை என்று இளைஞனாயிருக்கும்போதே வைராக்கியமாகத் தீர்மானித்திருந்தார் ஜட்சன். அதன் பலனாக 30 ஆண்டுகளுக்குப் பின்பு பர்மாவில் 63 ஆலயங்கள், 163 அருட்பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் மட்டுமின்றி, 7000க்கும் மேற்பட்ட பர்மா மக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு அவருக்காக வாழ்ந்து வருகின்றனர்.

**1850இல் ஜட்சன் காசநோயினால் மிகவும் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காகக் கடல் பிரயாணம் மேற்கொண்டார். பிரயாணத்தின்போது தனது 62ஆம் வயதில் மரணமடைந்தார். ஜட்சனின் உடல் கடலில் அடக்கம்பண்ணப்பட்டது. ஜட்சன் கால் பதித்த இடங்களில் அவர் விட்டுச்சென்ற ஊழியங்களை இப்போது பல மிஷனெரிகள் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இவருடைய வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்களும், சோதனைகளும், பாடுகளும் ஏற்பட்டபோதிலும் தேவன் ஜட்சனை அற்புதமாய்க் காப்பாற்றி வந்தார். ஜட்சனின் ஊழியத்தின் பயனாக இன்று பர்மாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். ஜட்சன் தன் வாழ்க்கை முழுவதையும் பர்மாவுக்காகவே அர்ப்பணித்திருந்தார்.**

**வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாலிபர்களே! நாடுகடந்து வந்து அருட்பணி செய்த ஊழியர்களைச் சற்று சிந்திப்பீர்களா? அந்நிய நாட்டவர் ஆண்டவரை அறியும்படி உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா? அந்த அழைப்பு உங்களுக்கு இருக்கிறதா? உங்கள் சபை அருட்பணியாளர்களை அனுப்பும் சபையாயிருக்கிறதா? அருட்பணி தாகமுள்ளவராக நீங்கள் மாறுவீர்களா?**



# இது இல்ல Trendu...!

தகவல்: டியூக் ரிச்சர்ட்

## ஆவியில் மாதிரி


Hi பிரண்ட்ஸ்! உங்களை இந்த வாலிபர் உலகம் மூலமாகச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. நாம் தொடர்ந்து இந்தப் பகுதியில் 1 தீமோ. 4:12ஐ மையமாக வைத்து, எந்தெந்த காரியத்தில் கிறிஸ்தவ வாலிபர்கள் மாதிரியாய் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஆராய்ந்து வருகின்றோம். இம்மாதம் ஆவியில் மாதிரியாய் எப்படி இருக்க வேண்டும் என்று அறிந்து கொள்வோம் வாருங்கள்.

இந்த நாட்களில் அதிகமாக வாலிபர்களிடத்தில் காணப்படும் விஷயம் ''மனசுக்கு சரியில்லை! ஒண்ணுமே ஓட மாட்டேங்குது!'' போன்ற வார்த்தைகள். இதற்குக் காரணம் என்ன? சரீர பலவீனம் அல்ல, முறிந்து போன ஆவி. சிலர் எதற்கு எடுத்தாலும் எரிச்சல்படுவர். ஒரு காரியத்தைச் சொன்னால் சம்மந்தமே இல்லாமல் கோபப்படுவர். இதற்குப் பின்னாடி இருப்பது எரிச்சலின் ஆவி. இன்னும் சிலருக்கு எப்பொழுது பார்த்தாலும் பாலியல் சம்பந்தப்பட்ட சிந்தனைகளே ஓடிக்கொண்டிருக்கும். இதற்குப் பின்னாடி செயல்படுவது வேசித்தனத்தின் ஆவி. இப்படி பல்வேறுபட்ட ஆவிகளால் வாலிபர்கள் இந்த நாட்களில் அலைக்கழிக்கப்படுகிறார்கள்.

வேதத்தில் சங்கீதத்தில் ''தேவனே நிலைவரமான ஆவியை எனக்குத் தாரும்; உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்'' என்று ஒரு அழகான ஜெபம் எழுதப்பட்டு இருக்கிறது. Dear friends... இந்த நாட்களில் நம்முடைய ஆவி எப்படி செயல்படுகிறது, எதின் பிடியில் இருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்கணும். நாம் பரிசுத்த ஆவியானவரால் ஆளுகை செய்யப்பட்டிருக்கும்போது நம்முடைய சிந்தையில், செயல்களில் பரிசுத்தம் இருக்கும். நம்மைப் பார்க்கிறவர்கள் அதன் மூலமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

ஆவி கர்த்தர் தந்த தீபமாய் இருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. அந்தத் தீபம் அணைந்து போகக் கூடாது. ஆகவேதான், பவுல், 'ஆவியை அவித்துப் போடாதீர்கள்' என்கிற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். 'மனுஷனுடைய ஆவி அவன் பலவீனத்தைத் தாங்கும்' என்று சொன்ன சாலோமோன் ஞானி, ''முறிந்த ஆவி யாரால் தாங்கக்கூடும்'' என்றும் கூறுகிறார். நம்முடைய ஆவி முறிந்து போய்விட்டதென்றால் அல்லது ஆவி காயப்பட்டால் யாரால் காயங்கட்ட முடியும்?

இன்று வாலிபர்கள் அநேகர் ஆவியில் காயப்பட்டு இருக்கிறார்கள். அதுவே அவர்களை மன அழுத்தத்திற்கு கொண்டு போகிறது. ஆவி உற்சாகம் உள்ளது. அந்த உற்சாகம் தணிந்து போகாதபடிக்கு நாம் பாதுகாத்துக்கொள்வது மிக மிக முக்கியம். ஆகவேதான் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது ஆவியைக் குறித்து ஜாக்கிரதையாய் இரு என்று சொல்கிறார். நம்முடைய ஆவிதான் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.



ஆகவே friends கொஞ்சம் ஆராய்ந்து பாருங்க. யோசேப்போடு கூடக் கர்த்தருடைய ஆவியானவர் இருந்தார். அதைப் பார்வோன் பார்த்துத் தேவர்களின் ஆவி அப்படின்னு சொல்லுகிறார். நமக்குள்ளே எந்த ஆவி கிரியை செய்கிறதோ அந்த ஆவியின் சுபாவம் நமக்குள் இருந்து வெளிப்படும். உங்கள் ஆவியைப் பரிசுத்த ஆவியின் controlல் கொடுங்கள். நிச்சயமாக இந்த வாலிப வயது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

**காயப்பட்ட ஆவியைக் காயங்கட்ட பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே முடியும். அவர் காயங்கட்டுபவர். முறிந்த ஆவியை உயர்ப்பிக்கிறவர். பிரண்ட்ஸ் நம்ம trend பரிசுத்த ஆவியானவர். சோர்ந்து போய் இருப்பது ஒரு கிறிஸ்தவ வாலிபனின் trend அல்ல. உலகத்திற்கு மாதிரியாக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றால் நம்முடைய ஆவி உயிர்ப்பிக்கப்பட்டதாக இருக்கனும். நீங்கள் உயிரடைவது மாத்திரமல்லாமல் மற்ற வாலிபர்களையும் உயிரடையப்பண்ணுங்கள்...!**



# அன்னையர் தினம்

## மே 11

கருவறையில் 280 நாட்கள் வளரும் ஒரு சிசுவுக்கு, தாயின் ரத்தத்தில் உள்ள சத்துக்களே தொப்புள் கொடியின் மூலம் உயிர்தாங்கும் உணவாகப் போகின்றன. குழந்தையின் பாலினம் அறியாமலே, தனக்குக் கொடுத்த கடவுளின் அற்புதமான பரிசாகத் தன் கருவில் சுமந்து, உலகத்தின் அழகைப் பார்க்க வழிவகுக்கும் உன்னதமான உறவே – அன்னை!

இவ்வுலகில் அன்னையைத் தவிர வேறு யாராலும் அளவில்லாத, உண்மையான அன்பை வழங்க முடியாது. அன்பின் சின்னமாகத் திகழ்பவர்களே அன்னையர்கள்! அந்த அன்பின் பெருமை நிறைந்த அன்னையை மகிழ்விக்க இந்த அன்னையர் தினத்தில் நாம் என்ன செய்யலாம்?

## அம்மாவை மகிழ்விக்கும் சில எளிய வழிகள்

### பரிசு கொடுங்கள்



அம்மாவிற்குப் பிடித்த ஏதாவது ஒரு அழகான பரிசைப் பரிசளியுங்கள். அது ஒரு புடவை, ஒரு புத்தகம், அல்லது வெறும் மலர்கொத்தாக இருந்தாலும், அவர்களின் முகத்தில் மலர்ச்சி பிறக்கும்!

### பிடித்த உணவைச் சமைத்துக் கொடுங்கள்



அம்மா எதை விரும்பிச் சாப்பிடுவார்களோ, அந்த உணவை இன்று உங்களின் அன்பு நிறைந்த கைகளால் சமைத்துக் கொடுங்கள். அவர்களுக்குப் பிடித்த இனிப்பும் செய்து கொடுக்கும்போதே, அவர்களின் மகிழ்ச்சி இன்னும் அதிகரிக்கும்!

### நேரம் செலவிடுங்கள்



அம்மா ஒருநாள் முழுவதும் உங்களோடு இருக்க விரும்புகிறார்கள். அவர்களுடன் அமர்ந்து ஜாலியாகப் பேசி, பழைய நாட்களை நினைவுகூருங்கள். கூடவே, சில விளையாட்டுகள் விளையாடுங்கள் – அவர்களின் உள்ளம் குழந்தைபோல் குதூகலிக்கட்டும்!

### அன்பான வாழ்த்துகளைப் பகிருங்கள்



அம்மாவை நேரில் சந்தித்து, அல்லது தொலைபேசியில் அழைத்து, “அம்மா, உங்கள் அன்பிற்கும், தியாகத்திற்கும் நன்றி! அன்னையர் தின வாழ்த்துகள்!” என்று கூறுங்கள். அத்துடன், அவர்களின் வாழ்க்கையில் நீங்கள் ரசித்த சிறப்பான நிகழ்வுகளைப் பகிருங்கள்.

நாம் இன்று ஒரு நல்ல நிலையில் இருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் அம்மாவின் உழைப்பு, தியாகம், அன்பு, அர்ப்பணம்! நம் ஒவ்வொரு முன்னேற்றத்திற்கும் பின்னணி அம்மாவின் அன்பே! அத்தகைய தாயைப் போற்றித் துதிக்க அன்னையர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

**அன்னையர் தின வாழ்த்துகள்!**

# கனவில் இருந்து Canva



சாதனை: சுமா

**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! வாழ்க்கையில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் என்னவென்றால், எல்லோரிடமும் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள் இருக்கும். ஆனால் அது கனவாக மட்டுமே இருக்குமானால், நம்மால் சாதிக்க முடியாது. ஆனால் கனவை நிறைவேற்ற ஏதாவது முயற்சி செய்ய கற்றுக் கொள்வோமானால், கண்டிப்பாக நம்மால் வெற்றி காண முடியும். அப்படி தன் கனவை நிறைவாக்கின வெற்றியாளரின் வாழ்க்கை உங்கள் முன்..**




மெலனி பெர்கின்ஸ் (**Melanie Perkins**) 1987ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் **Perth** நகரில் பிறந்தார். மெலனி தனது பள்ளி காலத்திலேயே கைவினைப் பொருட்களை உருவாக்கி விற்று வந்தார். சிறுவயதிலிருந்தே தொழில் முனைவுத் துறையில் ஆர்வம் கொண்டிருந்தார். பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, மென்பொருள் மற்றும் கிராபிக் டிசைன் மென்பொருட்கள், மிகவும் சிக்கலானதாக இருப்பதை கவனித்த இவருக்கு அவற்றை எளிமையானதாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் வந்தது. இதனால் 2007ஆம் ஆண்டு மெலனி



தனது கூட்டாளியான Chiff Obrecht உடன் இணைந்து Fashion Books என்ற ஆன்லைன் டிசைன் platformஐ உருவாக்கினார். மெலனியின் கனவு ஆன்லைன் டிசைன் platformஐ உருவாக்கி அதில் வெற்றி காண வேண்டும் என்பதே. 2013ஆம் ஆண்டு மெலனி, Chiff Obrecht மற்றும் Cameron Adans இணைந்து Canva நிறுவனத்தை தொடங்கினார். தொடக்க காலங்களில் மெலனி முதலீட்டாளர்களிடம் தனது யோசனையைக் கொண்டு சென்ற போது, பலர் அதை நிராகரித்தனர். ஆனால் தன் கனவை நிறைவேற்ற தொடர்ந்து முயற்சி செய்து முடிவில் வெற்றி கண்டார்.




**இன்று Canva, உலகின் முன்னணி டிசைனிங் மென்பொருளாக வளர்ந்து வருகிறது. 190 நாடுகளுக்கு மேலாக Canvaவை மக்கள் பயன்படுத்துகின்றனர். Canva பல பில்லியன் டாலர் மதிப்புள்ள ஒரு நிறுவனமாக மாறி உள்ளது.**

**இதை வாசிக்கும் நண்பர்களே! உங்கள் கனவுகளை வெற்றியாக மாற்ற, எல்லாவற்றையும் எதிர்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். கனவை விட்டு விடாமல், அதை நிறைவேற்ற மெலனி போல போராட வேண்டும். வெற்றி தூரமல்ல; அது உங்களிடமே உள்ளது. கனவை நிறைவேற்றுவதும், கனவாகவே வைத்துக் கொள்வதும் உங்களிடம் தான் உள்ளது...!**

# கோடை வெயிலை சமாளிக்க...

**வெயில் காலத்தில் உடலை குளிர்ச்சியாகவும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்க, நீர்ச்சத்து அதிகம் உள்ள பழங்கள், காய்கறிகள், பானங்கள் அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.**


**பழங்கள்:**
தர்பூசணி, வெள்ளரி, ஸ்ட்ராபெர்ரி, ஆரஞ்சு, திராட்சை, மாதுளை, பேரிக்காய், கொய்யா, முலாம்பழம்.



**காய்கறிகள்:**
சுரைக்காய், முட்டைக்கோஸ், கேரட், தக்காளி, பீட்ரூட், கத்திரிக்காய், புடலை.



**குடிபானங்கள்:**
இளநீர், பனை நுங்கு, தர்பூசணி ஜூஸ், தயிர், மோர்.



# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (4th May)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SATURDAY (10th May)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

## EVERY 2nd SUNDAY (11th May)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre, 16B Naveen Nest Apartment,Podhigai Nagar, 1st street, Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre, Grace Auto 1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, HH Complex,
Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

*EVERY 3rd SATURDAY (17th May)*

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre, M K Complex,
71, Venkatesapuram, Near Bank of Baroda,
Trichy Main Road. 9788788512

*EVERY 3rd SUNDAY (18th May)*

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre, Shah Complex,
#43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre, HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre, #90, 1st Floor,
Arts College Road, Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre, 22A, 1st Floor ,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur. 9489775075 |
8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing, Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via), Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex, TTP Main Rd,
9976766322 | 7373374733

RANIPET (3PM-6PM)
World Revival Prayer Centre, Railway Station Road,
Zion Nagar, Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

NAGERCOIL (3PM TO 6PM)
World Revival Prayer Centre, NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

PONDICHERRY (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Kottupalayam
Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

CHITTOOR (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

*EVERY 4th SUNDAY (25th May)*

THIRUVALLUR (3PM -5:30PM)
World Revival Prayer Centre, H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

KARUR (3PM-5:30PM)
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

MUMBAI-MALAD (4PM – 6PM)
Bethel Ground Floor, 305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

PERNAMPET (3PM TO 6PM)
Revival Prayer centre, VK Road.
9442885315

THISAYANVILAI (2:30 PM TO 5:30 PM)
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845, 9750955548

MADURAI (3PM -5:30PM)
Devanukae Mahimai Church,Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41,
K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**



# நான் ஒரு ஜெப வீரன்

## பரிந்து பேசும் ஜெபம்!

***அன்பான வாலிபர்களே! நான் ஒரு ஜெபவீரன் என்ற பகுதியின் மூலம் தொடர்ச்சியாகப் பலவிதமான ஜெபங்களைக் குறித்து கற்று வருகிறோம். இதை நாம் படித்துவிட்டு சென்றால் நமக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. இதை நம் தனிப்பட்ட ஜெப நேரத்தில் அப்பியாசப்படுத்தினால் நம் ஜெப வாழ்க்கை வித்தியாசமாகவும், சுவாரஸ்யமாகவும் மாறும். கடந்த மாதம் அன்னாளின் கண்ணீரின் ஜெபம் பெரிய தீர்க்கதரிசி பிறப்பதற்கு காரணமாக இருந்ததைக் குறித்து வாசித்தோம்.***

பரிந்து பேசுதல் என்பது ஒருவருக்காக இன்னொருவர் பேசுவது. அதிலும் சரியானதை செய்த ஒருவருக்காகப் பரிந்து பேச வேண்டியதில்லை. தவறு செய்த ஒருவருக்காக மன்றாடுவதே பரிந்து பேசுவதாகும். **'...மன்னித்தருளும், இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்'** (யாத். 32:32) என்று மோசே ஜெபித்தார். அதாவது தான் தண்டிக்கப்பட்டாலும் பரவாயில்லை, தன் ஜனங்கள் மன்னிப்படைய வேண்டும் என்பதே அவரது ஜெபமாக இருந்தது. ஜனங்களுக்காக மன்றாடி எப்படியாவது தேவனுடைய கோபாக்கினையிலிருந்து அவர்களைத் தப்புவிக்க வேண்டும் என்பதே மோசேயின் ஜெபத்தின் நோக்கமாய் இருந்தது.

நாம் நமது தேவைகளுக்காக ஒருவேளை மன்றாடி ஜெபித்திருக்கலாம். ஆனால் பிறருடைய தேவைகளுக்காக மன்றாடி ஜெபிப்பதுண்டா? மற்றவர்களுக்காக நாம் ஜெபிக்கும் ஜெபங்கள் கடமைக்காக ஜெபிப்பதாகவே இருக்கிறது. நான் எந்தப் பாவத்தையும் செய்யவில்லை நான் ஏன் ஜனங்களுக்காக ஜெபிக்க வேண்டும், இவர்கள் தாங்கள் செய்த பாவத்திற்கு தண்டனையை அனுபவிக்கிறார்கள் என்று மோசே அமைதியாக இருந்து விடவில்லை. மோசே ஜனங்களுக்காகத் திறப்பிலே நின்று கெஞ்சி பிரார்த்தித்தான் (யாத். 32:10-13). ஜனங்களின் பாவத்தைத் தன் மீது ஏற்றுக்கொண்டு, அவர்களுக்காகக் கர்த்தரிடத்தில் மோசே பரிந்து பேசி ஜெபித்தார். இது தான் கர்த்தர் எதிர்பார்க்கிற ஜெபம். மோசே பரிந்து பேசி ஜெபித்தத்தின் விளைவாகக் கர்த்தரின் உக்கிர கோபத்தை மாற்றியது (யாத். 32:14). அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச்



செய்யாதபடிக்கு பரிதாபங்கொண்டார் என்று வாசிக்கிறோம். மன்றாட்டு ஜெபத்திற்கு எத்தனை வல்லமை என்று இந்த வேத பகுதி நமக்குக் காண்பிக்கிறது.

அன்பான வாலிபர்களே! நம் கண்ணீரின் ஜெபத்திற்கு மிகுந்த வல்லமையுண்டு. ஆனால் நம் தேவைகளுக்காகவும், உலக காரியங்களுக்காகவும் மாத்திரம் அதைப் பயன்படுத்தி, அழிந்து போகும் மக்களுக்காக ஜெபிக்க, திறப்பிலே நிற்க நாம் தவறி விடுகின்றோம். நம் கண்ணீரின் ஜெபம் தான் அழிந்து போகிற ஜனங்களைக் காப்பாற்றும் ஆயுதம். இன்று முதல் தேசத்திற்காகவும், ஆத்துமாக்களுக்காகவும் திறப்பிலே நிற்க உங்களை அர்ப்பணியுங்கள். திரள் கூட்ட ஜனங்கள் உங்கள் நிமித்தம் நரகாக்கினைக்கு தப்புவிக்கப்படுவார்கள்.



**ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்...** (எரேமியா 9:1) என்று ஜெபித்த எரேமியா தீர்க்கதரிசியின் ஜெபமே நம் ஜெபமாகவும் மாறட்டும்!!





வரலாறு: சுதர்சன்

# மீண்டும் துளிர்த்த அத்திமரம்






**அன்பு நண்பர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்...! மீண்டும் துளிர்த்த அத்திமரம் என்ற வரலாற்று சம்பவத்தின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த சந்தோஷம்.**

**கடந்த மாதத்தில் இஸ்ரவேல் தேசம் உருவான வரலாற்றைக் குறித்து நாம் அறிந்து கொண்டோம். இஸ்ரவேல் தேசத்தை 40 ஆண்டுகள் ஆட்சி செய்த தாவீது இராஜாவுக்கு, இஸ்ரவேலின் தேவனுக்காக ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் தேவன் 'நீ எனக்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம், உன் மகனாகிய சாலொமோன் எனக்கு ஆலயத்தைக் கட்டுவான்' என்றார்.**

ஆனால் தாவீது தேவனுக்காக ஆலயம் கட்டுவதற்காகத் தங்கம், வெள்ளி, வெண்கலம், மரங்கள் எனத் திரளான சொத்துக்களை சேகரித்து வைத்தார். தாவீதின் காலத்திற்குப் பின் அவருடைய மகனாகிய சாலொமோன் இராஜா இஸ்ரவேல் தேசத்தில் எருசலேம் பட்டணத்தில் மோரியா மலையில் தேவனுக்காகப் பிரம்மாண்டமான தேவாலயத்தைக் கட்டினார்.



(இந்த மோரியா மலை தான் ஆபிரகாம் ஈசாக்கை பலி செலுத்துவதற்காக அழைத்துச் சென்ற மலை). எருசலேம் தேவாலயம் கட்டுவதற்கு இன்றைய இந்திய ரூபாய் மதிப்பீட்டின் படி கிட்டத்தட்ட 166 லட்சம் கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அப்படியானால் எவ்வளவு பிரம்மாண்டமான தேவாலயம் என்று இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

இந்தப் பிரம்மாண்டமான எருசலேம் தேவாலயம், பாபிலோனை ஆட்சி செய்த நேபுகாத்நேச்சார் என்ற ராஜாவால் கி.மு. 583ல் இடிக்கப்பட்டது. (அக்கால பாபிலோன் இக்கால ஈராக் தேசம்). எருசலேம் தேவாலயத்தில் உள்ள விலை மதிப்பற்ற பொக்கிஷங்களைப் பாபிலோனியர் சூறையாடி சென்றனர்.

கோரேஸ் இராஜா பாபிலோன் தேசத்தை ஆட்சி செய்த காலத்தில் செருபாபேல் என்னும் ஊழியக்காரனை கர்த்தர் எழுப்பி (கி.மு. 536 – கி.மு. 519 இந்தக் காலகட்டத்தில்) இரண்டாம் தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது.

இரண்டாவது முறை கட்டப்பட்ட தேவாலயம் நாட்கள் செல்லச் செல்லப் பழுதடைந்தது. இதற்கிடையில்



அநேகருடைய ஆட்சி காலங்கள் மாறிக்கொண்டே இருந்தது. அதாவது எருசலேம் பட்டணத்தை பல இராஜாக்கள் மாறி மாறி ஆட்சி செய்து கொண்டு வந்தார்கள். ஏரோது மன்னன் ஆட்சி செய்யும் காலத்தில் யூதர்களைப் பிரியப்படுத்துவதற்காகவே மனதாய் இரண்டாம் தேவாலயத்தைப் புதுப்பித்தார்.

இயேசு வாழ்ந்த காலத்தில் இந்த இரண்டாவதாக புதுப்பிக்கப்பட்ட தேவாலயம் தான் இருந்தது. இயேசு இந்தத் தேவாலயத்தைக் குறித்து ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடிக்கு இடிக்கப்பட்டு போகும் என்று கூறினார்.

**அவர்: நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு கல்லின்மேலிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வரும் என்றார் (லூக்கா 21:6).**

இயேசுவின் காலத்திற்குப் பின்னர் அதாவது இயேசு மனிதனாய் பிறந்து, வளர்ந்து, அற்புதங்களைச் செய்து, தன் ஜீவனைக் கொடுத்து, உயிர்த்தெழுந்த பின்னர் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் மேலறையில் ஜெபித்த சீஷர்கள் மேல் ஊற்றப்பட்டார். ஜெப ஆவி ஊற்றப்பட்டது. வைராக்கியமாய் சீஷர்கள் ஊழியம் செய்தார்கள். வல்லமை வெளிப்பட்டது. திரளான ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் இரட்சிக்கப்பட்டார்கள். திரளாய் திருச்சபைகள் பெருகின. எருசலேமில் ஊற்றப்பட்ட எழுப்புதல் அக்கினி யூதேயா சமாரியா நாடுகளில் எங்கும் பரவினது. இந்த எழுப்புதல் அக்கினி அண்டை நாடுகளிலும், தீவுகளிலும், கண்டங்களிலும், ரோமாபுரியிலும் ஊற்றப்பட்டது.

இந்த எழுப்புதல் அக்கினி என்னில் ஊற்றப்பட வேண்டும் என்று ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள்மேல் எழுப்புதல் அக்கினியை ஊற்றுவார். நீங்களும் அக்கினி ஜுவாலைகளாக எரிந்து பிரகாசிப்பீர்கள்.

**கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள். என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள் (அப். 2:17,18).**

**இந்தக் காலத்தில் அதாவது ரோமர்கள் ஆட்சி காலத்தில் கி.பி. 70வது வருடத்தில் எருசலேம் தேவாலயம், அதாவது இரண்டாவது தேவாலயம் தீக்கிரையாக்கப்பட்டது. இஸ்ரவேலர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் வம்சா வழியினர் இஸ்ரவேல் தேசத்தில் இல்லை. ஒரு யூதன் கூட இஸ்ரவேலில் இல்லை. இஸ்ரவேல் என்கிற பெயர் உலக வரைபடத்திலிருந்து எடுக்கப்பட்டு போயிற்று. எருசலேம் தேவாலயமும் தீக்கிரையாக்கப்பட்டது. இஸ்ரவேல் தேசமும் அழிந்து போனது.**

**அன்புத் நண்பர்களே, மீண்டும் துளிர்த்த அத்தி மரத்தைக் குறித்து வரும் மாதத்தில் நாம் காணலாம்.**

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 25th MAY
Time: 3:00 PM - 5:00 pm

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH




## சந்திரயான்-5 திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி: இஸ்ரோ தலைவர் தகவல்

சந்திரயான்-5 திட்டத்துக்கான அனுமதியை மத்திய அரசிடமிருந்து மூன்று நாட்களுக்கு முன்னர்தான் பெற்றுள்ளோம். இந்தத் திட்டத்தில் ஜப்பானுடன் இணைந்து நாங்கள் செயல்பட உள்ளோம். இது, சந்திரயான்-5 திட்டத்தின் அறிவியல் திறன்களை மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. 2023 ஆகஸ்ட் 23-ல் சந்திரயான்-3 வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் எந்தவித சேதாரமுமின்றி சாப்ட் லேண்டிங் மூலம் விக்ரம் லேண்டரை தரையிறக்கியது. இதன் மூலம், இந்தச் சாதனையைப் படைத்த உலகின் நான்காவது நாடு என்ற பெருமை ரஷ்யா, அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவுக்கு கிடைத்தது. சந்திரயான்-5 திட்டம் நிலவை முழுமையாக ஆராய்ச்சி செய்யும் நோக்கம் கொண்டது. எனவே, சந்திரயான் 3-ல் பயன்படுத்தப்பட்டது போன்று சிறிய வகை ரோவர் இதில் இடம்பெறாது. அதற்குப் பதிலாக 250 கிலோ எடையுள்ள பெரிய ரோவரை அனுப்பி சந்திரனின் மேற்பரப்பை விரிவாக ஆய்வு செய்ய உள்ளோம். இவ்வாறு நாராயணன் தெரிவித்தார்.

சந்திரயான்-1 திட்டம் கடந்த 2008-ம் ஆண்டிலும், சந்திரயான்-2 திட்டம் 2019-ம் ஆண்டிலும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டன. சந்திரயான்-4 திட்டத்தை 2027-க்குள் நிறைவேற்ற இஸ்ரோ இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் நிலவின் மேற்பரப்பில் உள்ள மாதிரிகளைச் சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சந்திரயான் -5 மற்றும் 6-வது திட்டங்களை அடுத்த பத்தாண்டுகளுக்குள் நிறைவேற்ற இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. இது, விண்வெளித் துறையில் 44 பில்லியன் டாலர் மைல்கல்லை தொடுவதற்கு ஏதுவாக அமையும். சந்திரயான் திட்டங்களைத் தொடர்ந்து ககன்யான் திட்டத்தையும் இஸ்ரோ செயல்படுத்த உள்ளது. இது, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டமாகும்.

– மார்ச் 8, இந்து தமிழ் திசை.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# என்ன படிக்கலாம்!!



பத்தாம் வகுப்பு. 12ஆம் வகுப்புத் தேர்வு எழுதி, ரிசல்ட்டுக்காகக் காத்திருக்கும் மாணவ, மாணவியர்கள்! அதிக மதிப்பெண் பெற்றதால் கணக்குப் பாடம் எடுக்க வேண்டும் என்ற எந்தவிதமான கட்டாயமும் இல்லை. உங்களால் எந்தப் பாடப்பிரிவை எடுத்தால் படிக்க முடியுமோ அந்தப் பாடப் பிரிவை எடுத்துப் படிக்க வேண்டும். பெற்றோர் சொல்கிறார்கள், நண்பர்கள் சொல்கிறார்கள் என்று உங்களால் படிக்க முடியாத பாடப்பிரிவை எடுத்துப் படிக்க வேண்டாம்.



### பட்டப்படிப்பு

11ஆம் வகுப்பில் சேரும் முன், கல்லூரியில் எந்த படிப்பைத் தேர்வு செய்யப் போகிறீர்கள் என்பதை முடிவு செய்தபின், பிளஸ் 1 பாட பிரிவுகளை தேர்வு செய்யுங்கள். மாறாக, அதிக மதிப்பெண் காரணமாக, கணித பாடம் எடுத்து விட்டு, பிளஸ் 2வுக்கு பின், பி.காம்., படிக்க முடியுமா என யோசிக்க கூடாது. அதேபோல, இன்ஜினியரிங் படிப்பில் சேர வேண்டும் என்றால், எந்தப் பாட பிரிவு தகுதியானது என்பதை இப்போதே முடிவு செய்ய வேண்டும். சி.ஏ., படிக்க எந்தப் பாட பிரிவை எடுக்க வேண்டும். வேளாண்மை, கால்நடை துறை படிப்புகளுக்கு, தற்போது, எந்தப் பாடபிரிவை எடுக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே முடிவு செய்து, அதற்கு ஏற்றப் பாட பிரிவைத் தேர்வு செய்து பாடப்பிரிவை தேர்வு செய்யுங்கள்.

### பாலிடெக்னிக் படிப்பு

மதிப்பெண் குறைவாக இருக்கிறது; பிளஸ் 1 படிக்க விருப்பமில்லை என்றால், பாலிடெக்னிக்கில் டிப்ளமா படிக்கலாம். இந்தப் படிப்பை மூன்றாண்டுகள் முடித்தபின், அவர்கள் நேரடியாக இன்ஜினியரிங் படிப்பில், இரண்டாம் ஆண்டில் சேரலாம் மேலும், டிப்ளமா படிப்பை முடித்தபின், தொழிற்சாலை மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களில் பணியாற்றியபடியே, பகுதி நேர, B.E., - B.Tech., படிப்பிலும் சேரலாம்.

### பாடப்பிரிவு தேர்வு செய்வதில் கவனம்

- பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றிருந்தாலும் உங்களால் எதைப் படிக்க முடியும் என்பதை முடிவு செய்து, அதற்கேற்ப பாட பிரிவுகளைத் தேர்வு செய்ய வேண்டும்.
- மருத்துவ படிப்புக்கு விருப்பம் இருந்தால், 'நீட்' தேர்வை எழுத, பிளஸ் 1ல் இருந்தே தயாராக வேண்டும். அதற்கான பயிற்சி பெறுவது குறித்தும், இப்போதே முடிவு செய்ய வேண்டும்.
- ஐ.ஐ.டி., – என்.ஐ.டி., போன்றவற்றில், இன்ஜினியரிங் படிக்க வேண்டும் என்றால், அதற்கு, JEE, நுழைவு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அதற்கும் இப்போதே முடிவு செய்து, பாடப்பிரிவை தேர்வு செய்ய வேண்டும்.
- தொழிற்கல்வி பாட பிரிவு எடுத்தால், பிளஸ் 2வுக்கு பின், இன்ஜினியரிங்கில் சில பாடப்பிரிவுகள் மட்டுமே படிக்க முடியும். அதைக்குறித்தும், மாணவர்கள் தெரிந்து கொண்டு அதற்கேற்ப பாடப்பிரிவுகளை தேர்வு செய்வது நல்லது.



**Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847**
**Postal Registration No: TTN/26/2023-2025.**
**Date of Publication: 25 – 04 -2025**
**Date of Posting: 28th to 30th of every month.**
**Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.**
**Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.**

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## ஆலங்குளத்தில்

நாள்: **மே 21** (புதன்கிழமை)
நேரம்: காலை 9:00 - மாலை 4:00
இடம்: உலக எழுப்புதல் ஜெப மையம், வாஞ்சிநாதன் தெரு, TPV மில் வடக்கு புறம்,துத்திக்குளம் ரோடு
செய்தியும் ஜெபமும்: பாஸ்டர் **சரவணன்**
தொடர்புக்கு: 9750955548, 9965377427

## சோளிங்கரில்

நாள்: **மே 24** (சனிக்கிழமை)
நேரம்: காலை 10:00 - மாலை 4:00
இடம்: அப்போஸ்தல கிறிஸ்தவ சபை, பாணாவரம் வழி சோளிங்கர், இராணிப்பேட்டை
செய்தியும் ஜெபமும்: சகோ. **சதீஷ்குமார்**
தொடர்புக்கு: 97912 95663, 95002 83179, 90806 98340

## வள்ளியூரில்

நாள்: **ஜூன் 21** (சனிக்கிழமை)
நேரம்: காலை 9:00 - மாலை 4:00
இடம்: மரியா பெண்கள் கலைமற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர் ரோடு, வள்ளியூர்
செய்தியும் ஜெபமும்: சகோ. **அவினாஷ்**
தொடர்புக்கு: 9443120544, 9750955548

## செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூரில்

நாள்: **ஜூன் 22** (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 4:00 - 7:00
இடம்: COME Compasssion Home
கருணை தெரு, மேட்டு தண்டலம், திருப்போரூர், (தண்டலம் பஸ் நிலையம் அருகில்)
செய்தியும் ஜெபமும்: சகோ. **காலேப்**
தொடர்புக்கு: 9710809626

